# வெளிச்சம்

மாசி-1994

விலை-20/




94
த்திரை
தழ்
வெளிச்சத்தின்
5வது
ள்ளி இதழ்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும், போஷாக்கு விரும்பிகளுக்கும்
ஓர் வரப்பிரசாதம்.

ஒரே இடத்தில் நேர விரயமின்றி உங்கள் தேவைகளைப்
பூர்த்தி செய்ய இன்றே நாடுங்கள்

## காமதேனு விவசாய கால்நடைப் பண்ணையின்
## விற்பனை நிலையம்

O பொருளாதார தடைகளை உடைத்தெறிவோம்.
O போஷாக்குள்ள உணவுகளை பெற்றிடுவோம்.

உணவுத் தேவைக்காக......

- முட்டை
- பால்
- இறைச்சிக்கோழி [புறொயிலர் சேவல்]
- பழவகை
- விவசாய உற்பத்திகள்.

வளர்ப்புத் தேவைக்காக......

- நல்லின கோழிகள்
- 1நாள் 1மாதவயதுடைய குஞ்சுகள்
- அடைமுட்டை [தாரா, கோழி, வான்கோழி]
- நல்லின சேவல்கள்
- நல்லின தாராக்கள்
- நல்லின முயல்கள்


இவற்றுடன்

O உள்ளூர் மூலப் பொருட்களையும், நோய் எதிர்ப்பு மருந்துகளையும் கொண்டு தயாரிக்கப்படும் கறவைத்தீன் மற்றும் கோழித்தீன் வகைகள்
O விலங்குகளுக்கான பூச்சி மருந்துகள், ஊட்டச்சத்து மருந்துகள் மற்றும் தேவையான மருந்து வகைகள்...
O கால் நடை வளர்ப்பிற்கு தேவையான உபகரணங்கள்.
O விவசாய உற்பத்திக்கான நல்லின விதைகள், நாற்றுக்கள், மரக்கன்றுகள்,
O உயர்ந்த இன ஆடு மாடுகள் மூலமான இயற்கை முறைச் சினைப்படுத்தும் சேவை

மேற்குறித்த தேவைகட்கு

## காமதேனு விவசாய கால்நடைப் பண்ணை

வெள்ளை வீதி, சுண்ணாகம்.
[மருதனாமடம் சந்திக்கு வடக்கே 300 யார் தூரத்தில்]



இனிவரும் நாட்களில் இளவேனில் கருக்கட்டும்.
மாருதம் தவழ்ந்து செடி கொடி தழுவும்
முதிர்ந்த இலையுதிர்ந்து மரங்கள் புதிதாய்ப் பிறக்கும்.
முற்றத்து வேம்பிருந்து
குக்கூவென்று குயில் பாடும்.
ஆடுகால் பூவரசுகள் அசையும்.
துலாக்கள் உடற்பயிற்சி செய்யும்.
அறுகுபடர்ந்த வரம்பில் ஆடுகள் அணிவகுக்கும்.
பச்சைப் பாவாடைகட்டி தோட்டங்கள் அழகுகாட்டும்.
விடிகாலை எழில்பூட்டி வெளியேவரும்.
சந்தைக்குப் போகும் வண்டில்களின்
சக்கரச் சத்தம் பூபாளமாகும்.
வரும் காலம் வசந்தம்.
எம்மண் இனி அழகு.
எதிரிக்கு எங்கே இது தெரியும்.
இந்த வசந்தத்தையும் எரியூட்டுவான்.
வெடிக்கும் எறிகணைகளுக்கு விரல்மடித்துக்கொண்டு
காப்பரணுள் நாங்கள் கண்துயில்வோம்.
இது கொடுமை.
இறப்புக்கு நிகர்.
இந்த வருடத்து மந்தமாருதத்திலும்
கந்தகக் கலப்பா?
ஏற்றுக்கொள்ளக் கூடாது.
வீதியெங்கும் வெளிச்சம் ஊற்றி
விடிய விடியத் திருவிழா வேண்டும்.
வல்லிபுரக் கோவிலுக்கு வண்டில்பூட்டு.
நிமிர்ந்து நின்று நிலவு பார்க்கவேண்டும்
நிமிர்.

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
04-3-1994

— மாலிகா —

வெளிச்சம்
மாசி - 1994
இதழ் - 23

''அடியைப்போல அண்ணன் தம்பி உதவமாட்டான்'' தமிழர் களிடையே நேற்றுவரை இந்தப் பழமொழிக்கு அர்த்தம் இருந்ததோ இல்லையோ இன்று புதுமொழியாக புனர்ஜென்மம் எடுத்துள்ளது என்பது மட்டும் உண்மை.

பூநகரியில் ''விழுந்த உதை'' ஸ்ரீலங்கா அரசை நேரத்துக் கொரு பேச்சாக உளறச் செய்துள்ளது. ஜனாதிபதி ஒரு பக்கம், பிரதமர் இன்னொரு பக்கம், மந்திரிகள் வேறொரு பக்கம், அரசு சார்புத் தினசரிகள் எல்லாவற்றுக்கும் ''ஆமாப்போடும்'' பக்கமுமாக காலையொன்று, மதியமொன்று, இரவு இன்னொன்றாக நிறை விழுந்தவன் வாய் பிதற்றல்போல யுத்தம், சமாதானம், இராணுவத் தீர்வு, பேச்சுவார்த்தை மேசை என்றெல்லாம் அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன.

நீண்ட காலமாக ஊமையாகிப்போன சமாதானச் சங்கு மீண்டும் ஊதப்படுகின்றது. அவரென்றும், இவரென்றும், மற்றவரென்றும் யார் யாரையோவெல்லாம் குமாரியும், குமணவும், கோமாரியும் கொண்டு வந்து இறக்கிவிடுகின்றன. மாவும், சீனியும் வரவேண்டிய கப்பலில் தீர்வும், திட்டமும் வருகின்றது. நல்லது. தமிழீழத்தில் எல்லாமே தட்டுப்பாடுதான். வரட்டும். வரவேற்கின்றோம்.

மக்களின் அவலங்களையும், குண்டு வீச்சுக்களால் ஏற்படும் தழும்புகளையும் பார்வையிடுவதுடன் இன்னும் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குள் தீர்வேதும் தென்படுகிறதா என்று நாடி பிடித் தறியவும் பலர் வருகின்றனர்; வரவும் உள்ளனர். எல்லோரையும் இருகை நீட்டி வணக்கம் கூறி வரவேற்கின்றோம்.

தமிழ் மக்களாகிய நாங்களும், எமது தேசியத் தலைமையான விடுதலைப் புலிகள் இயக்கமும், போராட்டம்மூலம் பெறத் துடிக்கும் இலக்கான பூரண விடுதலையை பேச்சுவார்த்தை மூலம் பெற முடியு மானால் சமாதான மேசையில் சிங்கள அரசைச் சந்திப்பதில் மகிழ்ச்சி யடைவோம். யுத்தமானால் என்ன? சமாதானமானால் என்ன? தமிழ் மக்களின் நலன் கருதியே, விடிவு கருதியே, விடுதலை கருதியே நாம் ஏற்றுக்கொள்வோம். சமாதானம் மூலம் விடுதலை கிட்டுமானால் ஆயுதமேந்திப் போராடி, உயிர்ப்பலி கொடுத்து, உரிமையைப் பெற

நாங்களென்ன யுத்தப் பிரேமிகளா? அல்லது ஆயுத ஆராதனைக் காரரா? இல்லையே. ஆயுதங்களை நாங்கள் கைகளில் ஏந்தியுள்ளது எம்மக்களின் நலன் கருதியும், பாதுகாப்புக் கருதியுமே அன்றி ஆயுதப் பிரியத்தால் அல்ல. இதை எமது தலைமை அன்றிலிருந்து இன்றுவரை சிங்கள அரசுக்கும், உலகிற்கும் சொல்லியே வருகிறது. சொல்லில் மட்டுமல்ல பல தடவைகள், பல விதமான நிகழ்வுகள் மூலம் நிருபித்தும் காட்டியுள்ளது.

இந்தச் சமிக்ஞைகள் சிங்கள அரசுக்குத்தான் தெரியவில்லை. நாங்கள் சமாதானத்துக்குத் தயார் என்று கூறியபோதெல்லாம் புலிகள் பலமிழந்து விட்டார்கள், பயந்து விட்டார்கள், அதுதான் பேச்சுவார்த்தைக்கு வரத் துடிக்கிறார்கள் என்று தப்புக் கணக்குப் போட்டு யுத்தத்திற்கு தயாராகுகின்றனர்.

மீண்டும் பேச்சுவார்த்தைகள் என்ற குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன. நம்பிக்கையென்ற ஒளிக்கீற்று தென்படாது சமரசத் தீர்வு என்று மேசைக்குப் போவது கசாப்புக் கடையின் மேசைக்குப் போகும் ஆட்டுக்கடாவின் நிலையென்பதை தமிழ் மக்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றனர்.

தொடர்ந்தும் குண்டுவீச்சுக்கள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தமிழீழத்தின் மீதான பொருளாதாரத் தடைகள், தமிழன் என்ற ஒரேயொரு காரணத்துக்காக தடுப்புக்காவல்கள், மர்ம மரணங்கள், அலைக்கழிப்புகள், அலட்சியங்கள் என்று சமாதானத்தின் மூலஸ்தான கதவுகளை மூடிவிட்டு, யன்னல் வழியாக முகத்தை நீட்டி எச்சில் போட்டு ஏமாற்றப் பார்க்கிறது ஸ்ரீலங்கா அரசு. விழுந்த அடியினால் ஏற்பட்ட காயங்களின் அவஸ்தைக் குரல்களே இன்று பல வழிகளில் கேட்கும் பேச்சுவார்த்தைக் குரல்களாகும்.

"அடியைப்போல அண்ணன் தம்பி உதவமாட்டான்" வெளிச்சம் இந்தப் பழமொழியை பூரணமாக நம்புகின்றது.



# சுதந்திரம் இல்லையேல் நிம்மதியாக வாழ முடியாது

— தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

('எனது மக்களின் விடுதலைக்காக' நூலிலிருந்து)

விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப்பெறுவதுதான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமே இல்லை. நாகரீகம் தோன்றிய காலம் தொட்டுஇன்று வரை சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட்டங்களை நடாத்திவருகிறது; யுத்தங்கள் புரிந்து இருக்கிறது. புரட்சிகள் செய்து இருக்கிறது. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது. இந்த சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் நிம்மதியாக வாழ முடியாது. சமாதானமாக வாழமுடியாது. சந்தோசமாக வாழ முடியாது. சுதந்திரத்தை வென்றெடுக்காதுபோனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம்இழந்து தலைகுனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும்.

படிப்படியாக அழிந்துபோக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழி எதுவும் இல்லை.

இளைஞர்கள் இருக்கிறார்கள், அவர்கள் போராடித் தமிழீழம் பெறுவார்கள்; அல்லாவிடில் இந்தியா இருக்கிறது, எமக்கு சுதந்திர தனியரசு பெற்றுத்தரும் என்ற வகையில் நாம் சும்மா இருந்துவிட்டால் எமக்குச் சுதந்திரம் கிடைக்கப்போவதில்லை. பொதுமக்களாகிய உங்களின் நேரடிப்பங்களிப்பின்றி எமது தேசிய சுதந்திரப் போராட்டம் வெற்றியளிக்கப் போவதில்லை. சுதந்திரப் போராட்டம் என்பதே மக்கள் போராட்டம். பரந்துபட்ட வெகுசனங்கள் ஒன்று திரண்டு ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சி கொண்டு போராட்டத்தில் பங்களித்தால்தான் எமக்கு வெற்றி நிச்சயம். எமது எதிரியோ தனது ஆயுதப் படைகளை எமக்கு எதிராக ஏவிவிட்டதுமன்றி சிங்கள வெகுசனத்தையும் தமிழருக்கு எதிராக அணிதிரட்டுகிறான். சிங்கள மக்களுக்கு இன வெறியூட்டி, போர்வெறியூட்டி ஆயுதம் தரித்த ஒரு இன யுத்தத்திற்கு தயார்படுத்துகின்றான். இந்த அதர்ம யுத்தத்திற்கு சிங்கள மக்களிடம் இருந்து நிதி திரட்டுகிறான். சிங்கள மக்களும் கோடிக் கணக்கில் பாதுகாப்பு நிதியென்று வாரி வழங்குகிறார்கள். முழுச் சிங்கள தேசமுமே ஒரு இன யுத்தத்திற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டு வருகிறது. ஆனால், தமிழராகிய எமது நிலைதான் என்ன?

இன ஒழிப்பின் விளிம்பில் நாம் தள்ளப்பட்டும் எமக்கு இன்னும் விடுதலைக்கான விழிப்புணர்ச்சியோ, வீராவேச உணர்ச்சியோ தோன்றவில்லை. பசியும் பஞ்சமுமாக தாங்கொணாத் துன்பங்கள் ஏற்பட்டும் நாம் இன்னும் போராடத் தயாராகவில்லை. இனியும் நாம் பயந்து பயந்து, ஒழிந்து ஒழிந்து, செத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. ஏதோ எங்கிருந்தோ எமக்குப் புறம்பான சக்திகள் கைகொடுத்து உதவும் என்று காத்துக்கொண்டிருப்பது அசட்டுத்தனம். நாம் போருக்குத்தயாராக வேண்டும். அடிமைகளாக வீழ்வதை விடப் போராடி வாழ்வதே மேன்மையானது என்ற இலட்சிய உணர்வோடு நாம் ஆயுதம் ஏந்தத் தயாராக வேண்டும். ஈழத் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக, வீரப்புலிகளாக மாறவேண்டும். தாழ்ந்து போன தமிழ் இனம் வீரப்புலி இனமாக மாற வேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்புண்டு. இந்த நெருக்கடியான காலகட்டத்தில், முழுச்சமுதாயமுமே பேரழிவை எதிர்நோக்கிய இச்சூழ்நிலையில், எம்மத்தியில் சுயநல உணர்வுகள் களையப் பெற்று சமூக உணர்வும் பிறக்க வேண்டும். பணத்தை முடக்காமல், உணவுப்பண்டங்களைப் பதுக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலங்கருதாமல் வசதி படைத்தோர் வசதியற்றோருக்கு உதவ வேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவவேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி. இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத்தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ள வேண்டும். □□

● கவிதை ●

# இது காலம் கனிந்த நேரம்

ஓ
ஓ

புதுவை இரத்தினதுரை

காற்று எங்கும் வியாபித்துளது.
கலங்காதே!
மூச்சை உள்வாங்கி வெளியேவிடு.
சுவாசம் சீராகும்.
முள்ளந்தண்டை நிமிர்த்தி
கை காலை உதறு
தளையறுந்து போகும்.
உனக்கு விலங்கிட எவரால் முடியும்?
நீ காலில் நசியும் சிறுபுழு அல்ல
உன்னைக் கையால் கசக்கமுடியாது.
நீ யார்?
உரத்துக் கேள் பதில் வரும்.
நீ யார்?
மனிதன் மட்டுமல்ல...
நீ மனிதனிலும் தமிழன்.
பயமறியாத பரம்பரை வித்து.
நல்லூரின் ''இராசவாசலில்'' தேடிப்பார்
இந்தமண் உனதென்ற ''தோம்பு'' கிடைக்கும்.
''பண்டாரவளவை'' உழுதுபார்
உன் பூட்டி வணங்கிய ''மாடவிளக்கும்'',
பொங்கிப் படைத்த ''பித்தளைத்தாம்பாளமும்''
வரலாறெழுதிய ''எழுத்தாணியும்'' வந்து சேரும்
வல்லிபுரக்கோவில் மணலைக் கிளறிப்பார்
நீ யாரென்ற தடயங்கள் தட்டுப்படும்.
இந்தளவும் இருக்கிறதே
இன்னுமேன் கட்டுண்டு கிடக்கின்றாய்.
எல்லாவற்றையும் மண்ணுள் புதைத்துவிட்டு
ஏன் இருப்பிழந்து இருக்கின்றாய்.
தமிழனே! நம்பிக்கையுடன் எழுவாய்
இரவு கரைந்து, கரைந்து
வைகறைப் பொழுதோடு கலக்கும்.
குங்குமச் சாந்தில் குளித்து
கிழக்கின் திரை விலத்தி
சூரியன் சுடர்விழி மலர்வான்

விடியும் பொழுது உனக்கு விரைந்து வருகிறது.
வரவேற்க ஆரார்த்தித் தட்டுடன் ஆயத்தமாகு.
ஆனால்...
புலரும் பொழுதுக்காகப் போராட வேண்டும்
என்பதைமட்டும் எண்ணிக்கொள்.
குஞ்சு கொத்தாமல்... முட்டை உடையாது.
கூழாகிப்போனால்...குஞ்சு பிறவாது.
வாழ்வுவரும் வழியில்
வேதனை வேலிகளைத் தாண்ட நேரிடும்.
குருதியில் குளித்தபடிதான் புதிய பிரசவம்.
தலைப்பிரசவம் தாய்க்கே புரியும்.
போராடிப் பெற்றால்தான்
விடுதலையின் விலை தெரியும்.
காலம் வந்து கதவைத் தட்டும் போது
சாவியைத் தயாராக வைத்திருப்பவன் புத்திசாலி
முகூர்த்த நேரத்தில்
தாலியைத் தொலைப்பவன் முட்டாள்.
முற்றிச் சரிந்த வயலுக்குள்
அரிவாளுடன் இறங்குபவன் அறிவாளி.
ஏர்கொண்டு இறங்கினால்...
புத்தியிலேதோ பிசகிருக்க வேண்டும்.
இது காலம் கனிந்த நேரம்.
தோளின் சுமையை
அடுத்த தலைமுறைக்கும் சுமத்தாதே.
பயணத்தை உன்கால்களே முடிக்கட்டும்.
இப்போது வேண்டும் வீரம்
நாணல் போலக் கூனல் கூடாது.
ஊசியிலை மரங்கள் போல நிற்பவன்
விழுந்தாலும் நினைக்கப்படுவான்.
மணிமுடியும், கவசமும் தாங்கிய
பெருமைக்குரிய பிறப்புடையவனே!
அடையாள அட்டையும்.
அகதிப்படிவமும் சுமக்கின்றாயே
நினைத்துப் பார்! நெஞ்சு கொதிக்கவில்லையா?
சாளரத்தைத் திறந்து வெளியே பார்.
குஞ்சுகள் கூட அணிவகுத்துப் போகின்றனர்.
முரசம் முழங்க முன்னேறுகின்றனர்.
முடிந்தால் அவர்களுடன் முன்னேறு
இல்லையேல் என்னசெய்வதா?
வாழ்த்துக்கூறி வழியனுப்பு.
வெற்றியுடன் வீடுதிரும்பும்வரை
அவர்கள் நினைவாக வாழ்ந்துகொள்.
அது போதும். ☐☐

## ● ஒரு கடிதம் ●

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய்.

தொடர்ந்து வெளிச்சம் படித்துவருகின்றேன். ஏன் சமகால இலக்கியங்கள், இலக்கியப் போக்குகள் பற்றி கட்டுரைகள் வருவதில்லை. சொக்கன் மட்டும் கவிதைகள் பற்றி ஒரு கட்டுரையைத் தொடராக எழுதியிருந்தார். நாடகம் பற்றிய கட்டுரைகள் வந்ததுபோல பிறவிடயங்களிலும் வரவேண்டும். எங்களுடைய வாழ்நிலையும், அதன் அனுபவங்களும் புதியனவாக இருக்கையில் இவற்றின் வெளிப்பாடாகவும் இலக்கியங்களும் புதியனவாகவே இருக்குமல்லவா? போராளிகளின் அனுபவங்கள், அவர்களுடைய இலட்சியக்கனவுகள் என்றவாறு இன்று பலவிடயங்கள் கலை; இலக்கியங்களில் வெளிப்படுவதை அவதானிக்கலாம். இந்த எண்ணங்கள் பற்றிய விமர்சனங்கள், வரவேண்டுமென்பதே ஆவல்.

வெளிச்சத்தில் இன்னுமொரு நல்ல அம்சம் பிரம்மஞானியின் கட்டுரைகள், இன்றைய நாளின் துயரங்களினூடும், நெருக்கடிகளினூடும் மனிதவாழ்க்கைபற்றி, வாழ்வின் சாராம்சம்பற்றி அவர் சிந்திப்பதுவும் எழுதுவதும் வரவேற்கத்தக்கது; நன்று.

வெளிச்சம் இவ்வளவு விரைவாக ஒரு இடத்தைப் பெற்று வருவது மகிழக்கூடிய விடயம். இன்னும் நல்ல விடயங்களுடன் வரவேண்டும். சில புதியவர்கள் நம்பிக்கையூட்டக்கூடியவாறு எழுதுகிறார்கள். புதியவர்களை வெளிச்சம் வளர்க்கட்டும். இந்தக் காலத்தின் சாட்சியாக, எங்களின் போர்க்குரலின் மெய்த் துடிப்பாக அது பிரதிபலிக்கட்டும். எல்லாவற்றுக்கும் இனிவரும் வெளிச்சங்களை எதிர்பார்க்கின்றேன்.

**தி. பகீரதன்**

# மையம் கொண்ட புயல்

ஐ

மணலாறு விஜயன்

செவ்வந்தியக்கா வாசலில் கோல மிட்டுக்கொண்டிருந்தாள்.

வாழ்வுடன் இணைந்த பண் பாட்டை அவள் மறந்துவிடவில்லை.

இளமையும். அழகும் அவளிட மிருந்தது. ஆனால், ஓயாமல் அவள் நெஞ்சில் ஓங்கி அடிக்கும் அலைகள் யாருக்குப் புரியும்.

தமிழினி ஓடிவந்து என்மடியில் அமர்ந்துகொண்டாள்.

செவ்வந்தியக்காவின் ஒரே மகள் அவள். ஆறுவயதினை எட்டித்தொட் டுக்கொண்டிருந்தாள். ''மாமா எனக்கு படகு செய்துதாருங்கோ'' என்று சொல்லி, பேப்பர் துண்டுகளை என் கையினுள் திணித்தாள். நான்கு படகு களை செய்து கொடுத்தேன்.

இது சிங்களக்கப்பல்.
இது சோனிக்கப்பல்

இது ஈப்பீக் கப்பல் என்று சொல்லி விட்டு நான்காவதை அவற்றின் நடுவே வைத்துவிட்டு இது அகதிக் கப்பல், என்றவள் கலகலவெனச் சிரித்தாள்.

'தமிழினி, ஏனம்மா சிரிக்கிறாய்' எனக்கேட்டேன்.

'இதுதான்மாமா நாங்கள் வந்த கப்பல் என்று பதில் தந்தாள். கொடி யவர் மூவருக்கு நடுவில் அகதிக்கப்பல் வந்தது அவளின் மனதை எத்துணை ஆழமாகப்பாதித்திருக்கிறது.

''தமிழினியின்ர அப்பா வெளி நாட்டில இருந்து எப்பவருவார்'' என்ற கேள்வியை அவளின் மனோ நிலையை அறிவதற்காகக் கேட்டேன்.

அவள் என்னை ஒருமுறை ஏற இறங்கப்பார்த்தாள். தெரிந்து கேட் கிறாரா தெரியாமல் கேட்கின்றாரா

என்ற பொருள் அவளது பார்வையில் தொனித்தது.

''என்ன பார்க்கிறாய்; வெளி நாட்டுக்குத்தான போட்டார்.'' என்றேன்.

''இல்லை. ஆமியும், ஈப்பீயும் சேர்ந்து அடிச்சுக் கொண்டுபோட்டினம்'' என்று அழுத்தமாகப்பதில் சொன்னாள்.

செவ்வந்தியக்கா என்னை திரும்பிப்பார்த்தாள். அவளுடைய கண்களில் நீர் நிரம்பிநின்றது. தமிழினி பிறக்கும் போது அவளது தந்தையை துரோகிகள் துணையோடுவந்த இராணுவத்தினர் கண்முன்னே துடிக்கத் துடிக்க அடித்துக்கொன்றது .... இன்னும் இன்றும் நினைவில்... மறக்கக் கூடியதா? ... கொடூரமான அந்த நினைவுகளோடுதான் தமிழினியை பாலூட்டி வளர்த்திருந்தாள் செவ்வந்தியக்கா. அதனால்தான் அப்பாவின் தோழில் படுத்துறங்கி வளராவிட்டாலும் தமிழினிக்கு எதிரியைப் பழிவாங்கும் எண்ணம் மனதில் மையங்கொண்டிருக்கின்றது.

''தமிழினி வளர்ந்தபின் பெரிய பள்ளிக்கூடத்தில படிச்சு டாக்டராய் வருவியா?'' என்று கேட்டேன்.

''இல்ல, அப்பாவை அடிச்சுக் கொண்டவங்கள புலிமாமாக்களோட சேர்ந்து சுடுவன்''

தெளிவான உறுதியை அவள் மழலையில் கண்டேன். தந்தையைக் கொன்றது, அகதியாய் வந்தது எல்லாமே அந்தக் குழந்தை உள்ளத்தில் நிலைகொண்டுவிட்டது.

தமிழினியை அழைத்துக் கொண்டு கடற்கரைநோக்கி நடந்தேன்.

செவ்வந்தியக்காவின் உடன் பிறப்பு; தமிழினியின் மாமன் இன்று கிழக்கு நோக்கிப் பயணமாகப்போகின்றார். பல ஆண்டுகள் விடுதலைக்களத்தில் நின்று, காயங்கள் சுமந்த போதும் தமிழ்த்தாய் அந்த வீரனின் பணியை இன்னும் வேண்டிநின்றாள். இன்று பொறுப்புள்ள தளபதியாய் கிழக்கே செல்லப்போகின்றான்.

சில வாரங்களுக்கு முன் அகதியாய் வந்திருக்கும் தன் அக்காவைப் பார்க்க சென்றிருந்தான். தமக்கையின் கையினால் சாப்பாடுவாங்கி உண்டபின் அங்கிருந்த பலகைக்கட்டிலில் சிறிதுநேரம் உறங்கி விட்டான். தம்பியாரின் தலைமாட்டிலிருந்து அவனது உடலில் இருந்த தழும்புகளைத்தடவித் தடவிப் பார்த்தாள். அந்த நிகழ்வு பசுமையாக என்மனதில் நிற்கிறது. செவ்வந்தியக்காவின் வாழ்க்கைத்துன்பங்களை அந்தப் பொறுப்பாளரிடம் கேட்டுவிடவேண்டுமென்ற ஆவலோடுதான் கடற்கரைக்கு வந்திருந்தேன்.

● ● ●

ரத்தம் சிந்தி தமிழ்மக்களை வாழவைக்கும் சூரியன் ஓய்வெடுக்க இன்னும் சில நிமிடங்களே இருந்தன. பொழுது விழுந்ததும் அந்த அதிவேகப் படகு எம்வீரர்களைச் சுமந்து கிழக்கு நோக்கிச் செல்லும்.

தென்தமிழீழ விடுதலைப்பயணத்தின் பெருங்கதையை, அந்தப் படகுக்கு பேசும் சக்தியிருந்தால் சொல்லிக் கொண்டேயிருக்கும்.

தொம்பிமணல். அந்த மணற் பரப்பில் அன்று காலையில் பட்ட

நெத்தலிமீன்கள் காயவிடப்பட்டிருந்தன. அவற்றுக்கு மேலே ஆயிரக்கணக்கான மீன்கொத்திப்பறவைகள் சிறகடித்து நின்றன.

ஒவ்வொரு தடவையும் அவை நிலத்தில் விழுந்து எழும்போதும் வெற்றிக்களிப்புடன் ஆரவாரித்தன. வெற்றியின் சின்னமாய் அலகில் ஒவ்வொரு நெத்தலிமீன் இருக்கும். அந்தரத்தில் வைத்தே அவற்றை விழுங்கிவிட்டு மீண்டும் நிலத்தில் விழும்.

விழுந்துவிழுந்து எழும்போதெல்லாம் வெற்றிக்களிப்பு. ஒவ்வொரு தடவையும் அவை ஒவ்வொரு மீனாக எடுத்தால் எவ்வளவு தொகை மீன்கள் இல்லாமற்போகும். அப்படியாயின் சம்மாட்டி ஏன் அவற்றைக் கலைக்கமுனையவில்லை? மக்களுக்கு ஒரு மீன்கூட கொடுக்கவிரும்பாத அந்த சம்மாட்டி ஆயிரக்கணக்கில் எடுக்கும் பறவைகளைமட்டும் ஏன் அனுமதித்தான்? மனிதர்களைவிட பறவைகள் மீது அவனுக்கு அத்துணை பற்றுதலா? இல்லை.

அவற்றின் சுதந்திரத்தை இவனால் கட்டுப்படுத்தமுடியாது என்பது தான் உண்மை.

பொறுப்பாளரின் அருகில் அமர்ந்து கொண்டேன். கடற்கரை மணலில் கால் புதைத்து கடலன்னையை கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார் அவர். கொடுக்கும் சக்தியும் எடுக்கும் சக்தியும் கடலன்னையிடம் மிகுந்திருந்தது.

ஓயாமல் அடிக்கும் அலைகள் கரையை முத்தமிட்டுத்திரும்பின. திரை நண்டுகள் அலையோடு விளையாடின.

''புதுவருசம் பிறக்கப்போகுது. கொண்டாட்டம் ஏதுமில்லையா?''

என்ற கேள்வியோடு அவரின் கவனத்தை எனது பக்கம் திருப்பினேன்.

வெறுமையான சிரிப்பொன்று அவரிடம் வந்தது.

''எங்கட பண்பாட்ட நாம் மறக்கேலாதுதான். ஆனால் என்னால அது முடியவில்லை. ஒருமுறை புதுவருசம் கொண்டாட நினைச்சு கண்முன்னே காப்பாற்றமுடியாமல் ஒரு வீரனைப் பறிகொடுத்தனான்.

புதுவருசம் கொண்டாட சாமான்கள் எடுக்க ஆற்றைக்கடக்கவேண்டும். நீச்சல்வல்லமை எவரிடமும் இருக்கவில்லை. ஆற்றுக்குக் குறுக்கே கட்டியிருந்த கயிற்றினைப்பிடித்துக்கொண்டே மறுகரைக்கு செல்வதுண்டு. அன்றும் அதுதான் நடந்தது. வழமைக்கு மாறாக அன்று ஆறு வேகமாகப் பாய்ந்துகொண்டிருந்தது. புதுவருசம் கொண்டாடும் மகிழ்வில் அவன் சென்றதும், கைதவறிப்போக, காப்பாற்றுங்கோ, காப்பாற்றுங்கோ என்று கேட்டபடியே அவன் கொஞ்சங்கொஞ்சமாக நீருள் மறைந்துபோனதும்......

கண்முன்னே அவனை காப்பாற்ற முடியாமல் பறிகொடுத்தேன். மறக்கக்கூடியசம்பவமா?'' என்மனதிலும் அந்த நிகழ்வு வேதனையைக் கொடுத்தது. சிறிதுநேரம் மௌனமாக இருந்தேன்.

படகு புறப்படத்தயாராகிவிட்டது. படகோட்டி படகினை மும்முறை வலம் வந்து வணக்கம் செலுத்தினான். ஒவ்வொரு தடவை செல்லும் போதும் படகுக்கும், கடலுக்கும் மும்முறை வணக்கம் செலுத்துவது பட

கோட்டியின் மரபு. எத்துணை நம்பிக்கை.

தமிழினி ஓடிவந்து மாமனைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தாள்.

''மாமா, அப்பாவைக் கொண்டவங்களை சுட்டுப்போட்டு வா'' என்று விடைகொடுத்தாள். இருவரும் ஒருவரைஒருவர் இமைக்காமல் சிறிதுநேரம் நோக்கினர். அவளுடைய தலையை வருடி முதுகில் தட்டிக்கொடுத்தார். தமிழினியை வாங்கிக்கொண்டேன்.

''மாஸ்ரர், மணலாற்றுக்காய் என்ர ரத்தம் சிந்தியிருக்கிறது. யாழ் மண்ணுக்காய் என்ர ரத்தம் சிந்தியிருக்கிறது. இனி என்ர பிறந்த மண்ணுக்காய் சிந்தப்போகுது. மீண்டும் சந்திப்பம். இல்லாட்டி எனக்கும் இரண்டு வரிகள் எழுதுவியளெண்டு நம்பிக்கையிருக்கு'' என்று கூறிக்கொண்டு படகில் ஏறினார்.

அலைகளை எதிர்த்துக் கிழித்துக் கொண்டு படகு புறப்பட்டது.

மங்கிய இருளில், வெண்ணுரைகள் மறையும்வரை, என் கையும் தமிழினியின் கையும் அவருக்காய் அசைந்து கொண்டிருந்தது.

''மாமா, இதுதான் தமிழர்களின் படகு'' என்று தமிழினி சொன்னாள்.

இம்முறை அவள் சிரிக்கவில்லை. அவளின் மனக்கடலில விழுந்த அடிகள் புயலாக மையம் கொண்டுவிட்டது.

□□

□ □ □ □

''இந்தக் காலகட்டத்தில், கலைஞர்கள், எழுத்தாளர்கள் அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து நான் கூடிய அளவு பங்களிப்பை எதிர்பார்க்கிறேன் ஒரு தாயகத்தை கட்டி எழுப்பும் பணி புனிதமானது. இந்தப் புனித பணியில் பங்கு கொள்வது எல்லோரதும் தேசியக்கடன். ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகிவரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்கவேண்டும். இந்த சமூகமாற்றத்திற்கு வழிகோலும் வகையில் சிந்தனையாளர்களும் சிருஷ்டி கர்த்தாக்களும் எமது இயக்கத்திற்கு பக்கபலமாக நின்று பணியாற்றவேண்டும்.

இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப, வரலாற்று ஓட்டத்திற்கு அமைய, கலை, இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான புரட்சிகரமான படைப்புகளை சிருஷ்டிக்கவேண்டும். இந்தப் படைப்புக்கள் எமது புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரம் ஊட்டுவதாக அமையவேண்டும். சமூகப்புரட்சிக்கு வித்திடுவதாக அமையவேண்டும்.''

—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

● கட்டுரை ●

செ. கிருஷ்ணராசா, எம். ஏ

# வடமராட்சி வதிரி கோட்டைத்தெருவில் கிடைத்த ஈழக்காசு

நாணயங்கள் வரலாற்றுக் காலந்தொட்டு மக்கட் கூட்டத்தினரின் மத்தியில் பரிமாற்ற ஊடகங்களாக விளங்கியது மட்டுமல்லாது, நில ஆதிக்கவரம்பின் உச்ச வரையறைகளை வெளிப்படுத்தும் ஆணையாகவும் செயற்பட்டிருந்த முறையினைக் காணலாம். அரச முத்திரைகள், கொடிகள்-சின்னங்கள், குலதேவதைகள் ஆகியவை பதிக்கப்பட்ட நிலையில் நாணயங்களை மக்கள் மத்தியில் புழக்கத்திற்காக அதிகாரிகள் அனுமதித்திருந்தனர். புராதன காலங்களில் தோற்றம் பெற்று - வளர்ச்சி கண்டிருந்த அரச வம்சங்கள் யாவும் வெளியிட்டு வைத்த நாணயங்கள், முத்திரைகள், இலச்சினைகள் அத்தகைய தன்மை வாய்ந்திருந்தன. இதே போன்று வணிக கணங்களினால் (சாத்துக்களினால்) வியாபார நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த நாணயங்களும், முத்திரைகளும் மக்கள் மத்தியில் புழக்கத்தில் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. ஈழத்தைப் பொறுத்தவரையில் தென்னிந்திய வணிக கணங்களினால் பயன்படுத்தப்பட்டிருந்த இலச்சினைகளும், நாணயங்களும், கல்வெட்டுக்களும் ஆய்வின் போது கண்டு பிடிக்கப்பெற்று வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வணிக கணங்களினால் வெளியிட்டு வைக்கப்பெற்ற காசுகளில் அல்லது இலச்சினைகளில் அந்தந்த வணிகக்குழுக்களின் குழூக்குறியீடும், சில வேளைகளில் வாசகங்களும் இடம் பெறுவதுண்டு. வாசகங்கள் இன்றிக்கிடைத்த தனித்துவமான இலச்சினைகளுடனான ஈழக்காசுகளும் முத்திரைகளும் இப்பொழுது ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பின்னணியிலேயே மிக அண்மையில் வடமராட்சி-வதிரியில் உள்ள கோட்டைத்தெரு என்றமையத்தில் கிடைத்த ஐம்பொன்னினாலான நீள்சதுரமான வெட்டுக்காசு (ஈழக்காசு) மத்திய கால வடமராட்சிப் பிராந்தியத்துடனும், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டுடனும் சோழர்கால வணிக கூட்டுக்களில் ஒன்றான நானாதெசிகள் என்றழைக்கப்பட்டசாத்துக்கள் கொண்டிருந்த வியாபாரத் தொடர்பு பற்றியும், அப்பின்னணியில் சோழப்பண்பாடு இப்பிராந்தியத்தில் பரந்து கொண்டிருந்த முறைமை பற்றியும் அறிந்து கொள்வதற்குரிய தொல்லியற் சான்றாதாரமாகின்றது.

## நாணயம் அடையாளம் காணப்பட்ட வகை:-

கோட்டைத் தெருவில் கிடைத்த தனித்துவம் வாய்ந்த இந்நாணயமானது நீள்சதுரமான அமைப்பினையுடையது. இதன் நீளம் 3 சென்ரிமீற்றரும், அகலம் 2 சென்ரிமீற்றருமாகும். நாணயத்தகட்டின் உலோகம் ஐம்பொன் ஆகும். தகடு மிகவும் கனதியானதாகவும், உறுதிமிக்கதாகவும் காணப்படுகின்றது. நாணயத்தின் முற்பக்கத்தில் காணப்படுகின்ற உருவமானது சமபங்கநிலையில் சுகாசன இருக்கை முறையில் (இடது பாதம் இருக்கையில் சமாந்தரமாக மடிக்கப்பட்டும், வலது பாதம் இருக்கையிலிருந்து கீழே தொங்கிய வகையிலும்) வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மிக ஒடுங்கிய இடை, அகன்ற மார்புப் பகுதி, கேசம் கீழே தொங்கி நிற்கும் வகை (தலைவிரி கோலம்?) ஆகியன திட்டவட்டமாக ஒரு பெண்ணின் உருவ அமைதியை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

நான்கு கரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், முன்னிருகரங்களுமே மிகத் தெளிவாகவும், திரண்டதாகவும் காணப்படுகின்றது. முன்னிரு கரங்களுள் வலது கரத்தில் முச்சூலக் குறியுடனான ஒருகருவி காணப்படுகின்றது. அம்முச்சூலக் கருவியின் நடுக்காம்பானது மற்றைய இரு காம்புகளையும் விட சற்று உயரமானதாகவும், கூடவே கேச மகுட மட்டத்திற்குச் சற்று மேலாகவும் வெளிப்படுத்தப் பட்டுள்ளமையையும் காணலாம். இடது கரம் தாங்கி நிற்கும் பொருள் தெளிவற்றதாக உள்ளது. காரணம் அக்கரத்தின் முழங்கையுடனான பகுதி நாணய வெட்டுக்குள் (விளிம்புக்குள்) அகப்பட்டு விட்டமையே ஆகும். இவ்வாறான தோற்ற நிலையில் அந்நாணயத்தில் காணப்படும் பெண் உருவமானது சமபங்க இருக்கை நிலையை மிகத்தெளிவாகக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

இவ்வாறான தோற்றப்பாடுடைய முத்திரை (*Seal*) ஒன்று அம்பாந்தோட்டையில் 1986ல் கண்டு பிடிக்கப்பட்டு, வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அம்முத்திரையில் காணப்படுகின்ற பெண் உருவம் துர்க்கையின் ஒரு வடிவமான பரமேஸ்வரியாக வரலாற்றாசிரியர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த வட்டவடிவமான முத்திரையின் பின்புறத்தில் ''நானாதேசிகள் சபை'' என கி. பி. 11ம் நூற்றாண்டுக்குரிய தமிழ் எழுத்துக்களினால் வாசகம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளமையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இப்பின்னணியில் அம்முத்திரை சோழர் கால வணிக கணங்களுள் பிரசித்தமானதாக விளங்கிய நானாதேசிகள் என்பவர்களது சின்னமாகும் என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதே போன்றே கோட்டைத் தெருவிலிருந்து கிடைத்த இந்நீள்சதுரமான வெட்டுக்காசும் (ஈழக்காசு) நானாதெசிகளுடையது என்பதனை ஒப்பீட்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. முச்சூலக் கருவியுடனான பரமேஸ்வரி நானாதெசிகளுடைய காவல் தெய்வம் என்பது தென்னிந்தியாவில் கண்டு பிடிக்கப்பட்ட சான்றுகள் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

## சோழப்பண்பாடும் வடமராட்சியும்:

வடமராட்சிப் பிராந்தியத்தில் சோழப் பண்பாட்டு மரபுகளுடன் இணைந்த வகையிலான சில அம்சங்கள் ஏற்கனவே ஆராய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. பொலிகண்டிக் கண்மையில் உள்ள கங்குண்டான் கிராமம் (கங்கை கொண்டான்) அருகிலுள்ள பாலாவிக்குடியிருப்பு - பத்திரகாளியம்மன் கோவில், வதிரியில் உள்ள ஆலங்கட்டை, வீரணன் கல் (வீராணன் கல்), சக்கோட்டை (சாக்கோட்டை), வடமராட்சி கிழக்கில் உள்ள (சோழகுல) வல்லிபுரம், நாகர் கோயில், செம்பியன் பற்று ஆகியன சோழப் பண்பாட்டினை பிரதிபலித்து நின்றமைக் கான தொல்லியல் சான்றுகளைக் கொடுத்துள்ளன. ஆனால் கோட்டைத்தெரு என்றமையமானது ஏராளமான சோழர்கால மட்

பாண்டக் குவியல்களுடன் இணைந்த வகையில் இவ்வெட்டுக்காசினை (ஈழக்காசினை) கொண்டிருந்தமை இம்மையத்தின் அதீத வரலாற்று முக்கியத்துவத்தினை வெளிப் படுத்துவதாகவே உள்ளது. அதனை அங்கு நிலவிக் கொண்டிருக்கும் ஐதீகங்களும் உறுதிப்படுத்துகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கோட்டைத் தெரு என்ற பெயர்க்காரணம் தொடர்பாக அங்கு நிலவிக் கொண்டிருக்கும் ஐதீகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புராதன காலம் தொட்டு அங்குள்ள புளியமரத்தடியில் கோடு (மன்று) செயற்பட்டுவந்தது என்றும், அதனாலேயே அக்கிராமத்திற்கு கோட்டுத்தெரு என்ற பெயர் வழங்கப்பட்டது எனவும், அக்கோட்டில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை-வரிப் பணம் முதலியவை ஒரு பெரிய பானைக்குள் இட்டு மூடப்பட்ட நிலையில் மண்ணுக்குள் புதைத்து வைக்கப்பட்டதன் பின்னர் புளிய மரமொன்று அதற்கு மேல் வயோதிப மாது ஒருவரினால் நாட்டப்பட்டது என்றும் அக் கதைமரபு நிலவி வருகின்றது. கோட்டுத் தெருவே பின்னர் கோட்டைத் தெரு என மருவி இன்று வழங்கி வருகின்றது என்பது பலரது கருத்தாக உள்ளது.

கோட்டைத் தெருவிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட புராதன மட்பாத்திரங்கள் யாவும் சோழர்கால தொழினுட்ப உத்திகளையும், அலங்கார வேலைப்பாடுகளையும் ஒருங்கே கொண்டுள்ளன. பாத்திரங்களின் குறிப்பாக வாயகன்ற பாத்திரங்களின் கழுத்து வளையங்கள் மிகமிக தடிப்பாக இருப்பதோடு, கழுத்துப் பகுதியில் மிகவும் அலங்காரமான வனைவு வேலைப்பாடுகளைக் கொண்டு காணப்படுகின்றன. சமகால வெண்கலச் சிற்பமரபுகளில் காணக்கூடிய அலங்கார வனப்புக்களை இப்பாத்திரங்களிலும் காண முடிவது என்பது சோழக்கலைமரபினை தனித்துவமாக அடையாளம் காண வைக்கின்றது எனலாம். இதனையொத்த மட்பாத்திரங்களின்பல பாகங்கள் யாழ்ப்பாணக் கோட்டையின் தெற்குப்பக்க சுவர்ப்பரப்பிலிருந்து பல ஆண்டுகட்கு முன்னர் மீட்டெடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இம்மட்பாண்டங்களில் கி. பி. 11ம் 12ம் நூற்றாண்டுக்குரிய தமிழ் வரிவடிவம் பொறிக்கப்பட்டுக் காணப்படுவது சோழர்காலப் பண்பாட்டுப் பரப்பினை மேலும் அதிகரிக்கச் செய்யும் ஒரு வரலாற்று மூலமாக அமையும் என்பதில் எவ்விதச்சந்தேகமும் இருக்க முடியாது. யாழ்ப்பாணக் கோட்டையும், அதன் பின்னணி நிலமும் உள்ளடக்கியிருந்த நிலப்பரப்பானது 'ஐநூற்றுவன் வளவு' என்ற தோம்புப் பெயரினால் குறிப்பிடப்பட்டு வந்தமை இங்கு நோக்கத்தக்கது. 'ஐநூற்றுவர்' என்பது சோழர்கால வணிக கணங்களுள் ஒரு பிரிவினர் என்பது சாசனச் சான்றுகளினால் உறுதிப்படுத்தப்பட்ட செய்தியாகும். எனவே சோழர் காலத்தில் வணிககணத்தினரே அக் காலப் பண்பாட்டுக் குறிகாட்டிகளை மக்களுடன் தொடர்புபடுத்தி, தமது வாணிப- அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றிருந்தனர் என்பதுஇப்பொழுது தெளிவாகின்றது.

கோட்டைத் தெருவில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட இருக்கும், தொல்லியல் ஆய்வுகளினூடாகவே மேலதிகமாக சோழப் பண்பாடு பற்றியும், அதனுடன் இணைந்த உள்ளூர் நிர்வாக முறைகள் பற்றியும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும் என நாம் நம்பலாம்.

□□



வரும் சித்திரை (1994) இதழ் வெளிச்சத்தின் 25வது வெள்ளி இதழாகும். அதிக பக்கங்களுடன் அழகூற உருவாகும் இவ்விதழுக்கு படைப்பாளிகளிடமிருந்து படைப்புக்களை எதிர்பார்க்கின்றோம்.

வெளிச்சம், விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் நடுவப்பணியகம்,
கோண்டாவில், தமிழீழம்.

# சுடரோங்கு கதிர்வீச்சு

ஒ௦

சுபா

சுடரோங்கு கதிர்வீச்சு
எமை வந்தும் சுடுக!

அவனுக்கு மட்டுமல்ல
எங்களுக்கும் தான்
தாய் மண்

அடிமைப்பட்ட
எமக்காகவும் தான்
அவன் ஒளிச்சுடராய் இருந்தான்

இவன் காதலால்
பூமித்தாய் செழித்தாள்

புதிய வலிமை, திடம்
தளரா மனவுறுதி
இவைதான் இவன் விட்டுச்சென்றவை

இவன் தளிராய் இருந்தபோது
தாய் காட்டிய நிலவு
முற்றம்
அவன் மேனி தழுவிய தென்றல்
சிறைப்பட்டா இதுநாளும் இருக்கிறது என
அவன் கேட்கத் தொடங்கினான்

தாயின் விழிதழுவும் சோகம்
விளையாட்டல்லவே
பெற்றவளுக்காய்
பிள்ளை இவன் எழுந்தான்

காற்றாக
புயலாக
நெருப்பாக
அலையாக எழுந்தது கதையல்ல
அது அவன் வாழ்க்கை

போரினாலும்
தியாகத்தினாலும்
வலிய நெஞ்சினாலும்
வாழ்ந்து காட்டும் எம்பூமி

மண் வாழ்வதற்காய்
போராடிப் போன புதல்வனுக்கு
புயல் போர்த்தும் தாய்

இவர்களே
எழுகின்ற ஞாயிற்றின்
சுடரோங்கு கதிர்வீச்சு!

சுடரோங்கு கதிர் வீச்சு
எமைவந்தும் சுடுக!

நன்றி! எரிமலை (பிரான்ஸ்)
ஆடி, 93.

● கவிதை

# வேதனையின் வடுக்கள்

௯௯

பொன்னிலா

சதக்... சதக்...... என்று மூவரின் கால்களும் சேற்றில் புதைந்து எழும் ஒலியுடன் கடல் நோக்கிச் செல்கின்றன. பொழுது புலர்ந்தும் புலராத தன்மையது. ''டேய் தம்பி யஸ்ரின் கொஞ்சம் கெதியா நட வடா. விடிஞ்செல்ல போகுது'' என்றவாறு நடையை விரைவு படுத்துகின்றார் அந்தோனிப்பிள்ளை. ''ஓம் ...... ஓம்...... விடியத்தான் போகுது நேவி கண்டா அதோ கெதிதான். சுணங்காமப்பட்டியை இழுக்க வேணும்'' என்றார் அருகில் வந்த சின்னையா.

யஸ்ரினின் சிறியதந்தை தான் அவர். திருமணம் புரிந்து தனியாக வாழ்ந்த போதிலும், தான் கூட்டுத் தொழிலினைமேற்கொண்டு வந்தார் சின்னையா.

இளமையின் துடிப்பும் வேகமும் உடைய பதினைந்து வயது இளைஞன் தான் யஸ்ரின். ஆனால் கடின உழைப்பின் நிமித்தம் உருண்டு திரண்டிருந்த அவனது தோற்றத்தையும் உறுதியையும் காணும் எவரும் அவனுக்கு இருபது வயதென்றே மதிப்பிடுவர். அந்தோனிப்பிள்ளைக்கு இவனுடன் சேர்ந்து மொத்தம் ஐந்து பிள்ளைகள் யஸ்ரினுக்கு நேரே மூத்த பெண்கள் திருமணத்தை எதிர் நோக்கிய பருவத்தில் இருந்தனர். குடும்ப நிலை காரணம், படிப்பு இடை நிறுத்தப்பட்டது. இறுதியில் தந்தையுடன் மீன் பிடித் தொழிலுக்கு சென்று வருகிறான் யஸ்ரின்.

''ம்... ஏறடா... டேய் கம்பால கெதியா தாங்கு...'' என்றவாறு பாய்தனைப் பிரித்துகம்பத்தில்பொருத்தி சரிபார்க்கிறார் அந்தோனி. உயிரை உறைய வைக்கும் குளிரது. சில்லென்று சோழகக் காற்று உடலைத் தழுவ மூவரின் தேகமும் ஒரு முறை சிலிர்த்துக் கொள்கிறது. பட்டையினால் வள்ளத்தினுள் தேங்கி நின்ற நீரினை அள்ளி வெளியில் ஊற்றுகின்றார் சின்னையா. ''தாங்கினது போதும் பாயை இழுப்பம்'' என்றபடி யஸ்ரின் அணியப்பகுதியினை நோக்கிச் செல்கின்றான்.

'உர்...' என்ற இரைச்சலுடன் காற்று பாயில் படவும் சட சடவென ஒலி எழுப்பிய வண்ணம் காற்றுக்கு பாய் முகம் கொடுக்க வள்ளம் விரைகின்றது.

''சின்னையா ஒருக்கால் சவலையை இறுக்கிக் கட்டி விடுங்கோ. பாய் கெளிக்குது'' என்று பாயின் நுனிக் கயிற்றினை வள்ளத்தின் ஒரு பகுதியுடன் கட்டியபடி யஸ்ரின் கூறுகின்றான். குளிருக்கு ஈடு கொடுக்கும் முகமாக சுருட்டு ஒன்றினைப் பற்ற வைக்கின்றார் அந்தோனி. ''ஐயா உதை

முதல்லஎ றியுங்கோ, வெளிச் சத்தைக் கண்டால் அடிக்கப் போறாங்கள்'' என்றபடி சற்றுத் தொலைவில் தெரிந்த இராணுவ அரண்களை நோக்கிப் பார்வையைத் திருப்புகின்றான் யஸ்ரீன்.

''நிம்மதியா எப்ப தான் நாம் தொழில் செய்யிறது பாழ்படுவாங்கள்'' என்று மனதினுள் திட்டியபடி அணியத்தின் மேல் தளத்தில் அமர்ந்து கொள்கின்றார் அந்தோனி.

மிக அருகில் தான் 'நேவி'யின் படகு நிற்கின்றது. ஆகையினால் உயிரினைக் கையில் பிடித்தபடி தான் இவர்களது பயணங்கள் தொடர்கின்றன.

நேற்றும் 'கலிபரால' அடிச்சவன். இண்டைக்கு என்ன மாதிரியோ' என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டார் சின்னையா.

சிறிது தூரத்திலும் சில வள்ளங்கள் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தமையைக் கண்ட மூவரின் மனங்களும் ஒரு வித நிம்மதியை அடைகின்றன.

''பட்டி கிட்ட வந்திட்டுது. பாயை இழக்கடா யஸ்ரீன்'' என்றவாறு மீன் பிடிப்பதற்குத் தேவையான அத்தாங்கு, பறி, கம்பி எல்லாவற்றையும் கையில் எடுத்தபடி தயாராகின்றார் அந்தோனி.

நங்கூரம் பாய்ச்சப்படுகின்றது. வள்ளம் ஒருமுறை ஆட்டம் காட்டியது. பின்னர், அமைதி அடைகின்றது. யஸ்ரீனின் அத்தாங்கிலே முதற் கோலலிலேயே பாரைகளும், சூரை மீன்களுமாகத் துள்ளிவிளையாடின.

'நாலு நாளாக இழுக்காத பட்டி, இண்டைக்காவது சோறு சமைக்கலாம்' என்ற எண்ணம் மனதில் எழ யஸ்ரீனிடம் மீனை வாங்கி வள்ளத்தினுள் கொட்டினார் சின்னையா. அவற்றைத் தெரிந்து எடுத்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார் அந்தோனி.

நீலப் பேய்களின் ஒலி கடலில் எதிரொலித்தது. அந்தோனி புலனைத் தீட்டினார். நிமிர்ந்து பார்க்கவும், தூரத்தே கரும்புள்ளிகளாக அவை புலப்பட்டன. கல்முனையின் வெளிச்சக் கூண்டுப் பகுதியில் இருந்து இராணுவத்தினரால் ஏவி விடப்பட்ட வெளிச்சக் குண்டுகள் முழுச் சூரியனே உதயமாகியதைப் போன்று எங்கும் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சின. இவ்வெளிச்சத்தினூடே தூரத்தே தெரிந்த கரும்புள்ளிகள் சிறிது சிறிதாக முன்னோக்கி வருவதைக் கண்டார் அந்தோனி.

''தம்பி யஸ்ரீன், சின்னையா கெதியில ஏறுங்கோ வள்ளத்தில'' என்றவாறு நங்கூரத்தினை அவசரமாக எடுத்துப் போட்டார் அந்தோனி.

ஏன்? எதற்கு? என்று கேட்பதற்கு அவசியமிருக்கவில்லை. இருவருக்கும் நிலைமை புரிந்துவிடவே அத்தாங்கில் உள்ளமீனினை வள்ளத்தினுள் போட்டுவிட்டு இருவரும் ஏறிக் கொள்கின்றனர். இவர்களுக்கருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த வள்ளங்களும் கரையை நோக்கி விரையத் தொடங்குகின்றன. பாயை ஏற்ற முயலவும் அத்தருணத்திலே நெருப்புப் பாளங்கள் வள்ளத்தினை நோக்கி அசுர வேகத்துடன் வந்து வீழ்ந்து வெடித்தன. மூவரின் மனமும் இறைவனையே பிரலாபித்தன.

''வள்ளத்தில இருந்தா ஆபத்து. குதியுங்கோடா கடலுக்க. நீந்திப் போவம்'' என்றபடி அந்தோனி குதிக்க, அவரின் பின்னால் இருவரும் கடலுள் ..

தொடரும் குண்டுகளின் ஒலியினால் கடல் கலங்கிற்று. அரைமணி நேரமாகக் கடலினுள் போராட்டம். இரவும் சரியாகச் சாப்பிடாத குறை. களைப்பு மிகுதியிலும் அந்தோனியின் கை தானாகவே விரைகின்றது.

'இன்னும் கொஞ்சத் தூரந்தான் மணற்பிட்டிக்குப் போய்விடலாம்' என்று எண்ணமிட்டபடி நீந்திக் கொண்டிருந்தான் யஸ்ரீன். இடையிடையே பின்னோக்கி இரு தலைகளும் தெரிகின்றனவா என்றும்

கவனித்துக் கொண்டான். சிறு பொழுதின் பின்னர் ஒரு தலை மட்டுமே தண்ணீர் மட்டத்தில் தெரிவதைக் கண்ட யஸ்ரின் தலையை உயர்த்தி, தந்தையைக் காணாததினால் ''சின்னையா எங்க ஐயா'' எனக் கத்தியபடி வந்த பாதையை நோக்கித் திரும்பி நீந்தத் தொடங்கினான். தத்தளித்த தந்தையினை ஒரு கரத்தினால் பற்றியபடி மணற்திடலை வந்தடைந்தான். களைப்பு மிகுதியினால் சின்னையா ஏற்கனவே அங்கு படுத்திருந்தார்.

குண்டொலிகள் அதிர்ந்தன. அதற்குச் செவி கொடுக்க முடியாத நிலையில் மணற்திடலில் அமர்ந்திருந்த ஐந்து கொக்குகளும் தூரப் பறந்து சென்றன. எறிகணைகள் ஓய்ந்தபாடில்லை. மணற்திடலுக்குச் சமீபமாகவும் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன.

சிறிது நேர அமைதி யஸ்ரினின் மன ஓட்டத்திற்கு தூபம் போடுகின்றது. ''இவன் சிங்களவனால தமிழன் மட்டுமல்ல அவன்ர பகுதியில் வாழுற எந்த உயிருக்கும் ஆபத்து தான்'' எண்ணத்திற்கும், உடலுக்கும் இதமாக மெல்லிய சோளகக் காற்று உடலை வருடி சிறிது உற்சாகத்தைக் கொடுத்தது. தொடர்ந்தது குண்டுமழை. ...கற்பனை கலைய மீனுடன் விட்டு வந்த வள்ளத்தினை நினைத்துப் பார்க்கின்றான் யஸ்ரின். வேதனை முள்ளாய் நெஞ்சை நெருடியது.

'இதுக்கெல்லாம் எப்ப தான் விடிவு வரப் போகுதோ?' மனம் ஓலமிட்டது. யஸ்ரினின் கண்கள் வள்ளம் நின்ற திசையினை நோக்கவும் அரைக் கம்பத்தில் ஏற்றிய பாயுடன் நின்ற வள்ளத்தினுள் பட்ட குண்டொன்றினால் அது தீக்கிரையாகி கடலினுள் மெதுவாக மூழ்குவதைக் கண்டான். மூவரின் நெஞ்சிலிருந்தும் ஆற்றாமையின் நிமித்தம் பெருமூச்சு நீண்டதாய் புறப்பட்டது.

அதனைக் குலைக்கும் வகையில் காதைப் பிளக்கும் ஓசையுடன் மிகச் சமீபமாக ஒரு குண்டு வீழ்ந்து வெடிக்கின்றது. நேவியின் படகும் அருகில் தெரிய நீலப்பேய்களின் உருவம் தெளிவற்றுத் தெரிகின்றது.

''ஐயா எங்களைக் கண்டிட்டான் போல கிடக்கு, இதில கிடந்தா ஆபத்து மெதுவா வந்து தண்ணிக்குள்ள இறங்குவம்'' என்றான் யஸ்ரின்.

''ஓம்... அந்தோனி, இந்தப்பக்கம் பரப்பு அதால அவனால் இஞ்சால வரேலாது. வா போவம்'' என்றார் சின்னையா. மணல் மீது போராட்டம். தலைக்கு மேலாக பல குண்டுகள் கூவியபடி சென்றன. சிறிது நிமிர்ந்தாலும் தலை போவது திண்ணம். இந்த நிலையில் நெஞ்சையும் வயிற்றுப் பகுதியையும் மணலினுள் உராய்ந்தபடிக்கு கடலினை நோக்கிச் சென்றனர் மூவரும்.

மணல்கூட தன் பங்கிற்கு அவர்களின் நெஞ்சில் இருந்து குருதியைக் கொட்டவைத்துக் கொண்டிருந்தது. மீண்டும் கடலினுள் போராட்டம்... தேகம் புண்ணாகி இருந்ததனால் உப்பு நீர் படவும் வேதனை பன்மடங்காகின்றது.

ஊரே ஒருமுறை ஓப்பாரி வைக்கின்றது 'போன வள்ளமெல்லாம் வந்திட்டுது. அந்தோனியின்ர வள்ளத்தை மட்டும் காணயில்லை' என்ற செய்தி காட்டுத்தீயாகப் பரவி லூர்த்தம்மாவின் நெஞ்சை எரிக்கின்றது. முதல் குண்டுச் சத்தம் கேட்கும்போதே மனம் ஒரு நிலையில் இல்லை. அவளுக்கு இந்தச் செய்தியும் காதில் விழுந்த பின்னர், சொல்லவும் வேண்டுமா? தாய்க்குப் பின்புறமாக மூன்று பெண்களும். கண்ணீருடன் இளையவன் குமாரோ தாயின் சேலைத் தலைப்பைப் பிடித்தபடி அழுது கொண்டிருந்தான்.

''அழாதேங்கோ பிள்ளையள், அவங்க நீந்தி வந்திடுவாங்க'' என்றவாறு ஆறுதல் மொழிந்தார் ஒரு வயோதிபர். வார்த்தைகள் ஆறுதல் வழங்கிடுமா? தொடர்ந்து ஓலங்கள்.

சிறிது தூரத்தே மூவர் நீந்தி வருவது கண்ணுக்குத் தெரிய எல்லோர் மனங்களிலும் ஒருவித நிம்மதி பிறக்கின்றது. எறிகணைகள் சற்று ஓய்ந்து காணப்பட்டன. துணிந்த இளைஞர்கள் சிலர் வள்ளம் ஒன்றின் துணையுடன் மூவரையும் நோக்கி விரைகின்றனர். நிர்மலமான வானம் ஒன்றுமே நடவாததுபோல விரிந்து கிடக்கின்றது.

மூவரும் வள்ளத்தினுள் ஏற்றப்படுகின்றனர். அந் தோனி, சின்னையாவிடமிருந்து ஆறுதலின் வடிவமான சோக மூச்சுக்கள் வெளிவருகின்றன. சவல் ஒன்றில் சாய்ந்திருந்த யஸ்ரினின் கண்களோ தொலை தூரத்தில் தெரியும் இன வெறியரின் அரண்களையும் அவர்களால் எரியுண்ட தனது வள்ளம் நின்ற திசையினையும் பார்க்கின்றது. மனமோ ஆர்ப்பரிக்கும் கடலைபோல்......

□□

● கவிதை ●

# மௌனம்

இருள் கொண்ட கரும்பூமி,
அந்தக் கருமைக்குள்ளே,
வெண்ணிறக் கற்கள் மௌனித்துக் கொண்டிருக்கின்றன.
''மௌனம்'' இதன் ஆழத்தில்
எத்தனை அர்த்தங்கள்?
இந்த மௌனிப்புக்களின் மத்தியில்,
வரலாறுகள் உறங்கிக் கொண்டிருக்கின்றன.
அத்தனையும் ஈழம் என்ற கட்டிடத்தின்
அத்திவாரங்கள்.
விடிவு தேடிப் புறப்பட்ட
வெண்புறாக்கள்.
விடுதலைக்குக் கானம் பாடிய
கவிக்குயில்கள்
மலராத மெட்டுக்களாக
மணம் வீசிய மல்லிகைகள்.
விடுதலைக் காற்றுக்காக
கலங்காத மனதோடு
களமாடிய இலட்சிய புருஷர்கள்.
நீங்கள் மௌனமாக
மரணித்து விட்டீர்கள்.
ஆனால்......
அந்நேரம்முதல்,
இந்தக் காற்றும்,
இந்தக் கடலும்,
ஆரவாரமிடும் ஆர்ப்பொலிகள்
கேட்டவண்ணமே இருக்கின்றன.
உங்களைத் தாங்கிய கருவறைகள்
மௌனித்துக் கொண்டிருக்கும்போது......
விடுதலைக்காக......
இந்தத் தேசம் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும். □□

தொண்டையூர்
துவாரகன்

## 'சிரித்திரன்' சிவஞானசுந்தரத்துடன் ஒரு நேர்முகம்

ஐ

கருணாகரன்

'சிரித்திரன் சிவா' 'சிரித்திரன் சுந்தர்' என்று அழைக்கப்படும் சிவஞானசுந்தரம் அவர்கள் 1991ம் ஆண்டு தமிழீழத்தேசியதலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய 'மாமனிதர் விருது' இனைப்பெற்றவர்.

'சவாரித்தம்பர்' என்ற கருத்தோவியம் மூலம் தமிழ் மக்கள் அனைவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தவர். முப்பது வருடங்களுக்கு மேலாக 'சிரித்திரன்' என்ற சிரிப்பிதழை நடத்தி எம் மக்களுக்கு வழிகூறும் வல்லவராக விளங்குபவர்.

அகில இலங்கைக் கம்பன் கழகம் 1993ம் ஆண்டு 'மூதறிஞர்' பட்டத்தையும் 'கைலாசபதி நினைவு விருது' இனையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.

— வெளிச்சம்

●● ஒரு கருத்து சித்திர ஓவியராக, ஒரு பத்திரிகை ஆசிரியராக, ஒரு சமூக சிந்தனையாளராக நீங்கள் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்று விளங்குகிறீர்கள். எப்படி?

□□ அவசர உலகில், ஓடும் வாகனங்களிலும் ஒய்வு நேரங்களிலும் சுவைக்கக்கூடிய சஞ்சிகை ஒன்றை வெளியிட விரும்பினேன். எப்படி உலகப் பிரச்சினைகளை மறந்து சுவைக்கக்கூடிய சஞ்சிகையை பிரசுரிக்கலாம் என்று எண்ணினேன். பிரச்சினையை மறப்பதற்கு பிரச்சினையையே மூலக்கருத்தாக வைத்து சிந்தித்தேன். சிந்தனையில் மலரும் சிரிப்பே சமூகத்திற்கு சிறந்தது என எண்ணி சிரித்திரனைப் பிரசுரித்தேன். சிரித்திரன் பிரபல்யமானது.

●● கலையுலகில் கருத்துச் சித்திர வடிவம் உங்களைக் கவர்ந்ததன் காரணம் என்ன?

□□ அகத்தில் முத்திரை பதிக்க கருத்தோவியம் சிறந்த ஊடகம் என உணர்ந்தேன். கருத்தோவியம் சிறந்த வடிவம் எனத் தேர்ந்தெடுத்தேன்.

●● நீங்கள் வரைந்த கருத்து ஓவியச் சித்திரத்தில் 'சவாரித்தம்பர்' என்ற பாத்திரம் மிகவும் புகழ் பெற்றதொன்றாகும். இந்தப் பாத்திரத்தை உருவகம் செய்ததன் நோக்கமென்ன?

□□ ஒருநாள் நான் கொழும்பில் மத்திய நூல் நிலையம் சென்றிருந்தேன். அங்கு திரு. கைலாசபதி அவர்களும் வந்திருந்தார். அப்பொழுது திரு. கைலாசபதி அவர்கள் தினகரன் பத்திரிகை ஆசிரியராகப் பணி புரிந்து கொண்டு இருந்தார். அங்கே தான் அவர் என்னை சந்திக்க நேர்ந்தது. ''சுந்தர்... இப்போ நீர் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்?'' எனக் கேட்டார். நான் ''ஒரு கருத்து ஓவியக் கண்காட்சி வைப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டு இருக்கிறேன்'' என்றேன். ''நீங்கள் தினமும் கருத்தோவியக் கண்காட்சி வைப்பதற்கு ஒரு அருமையான கண்காட்சிச்சாலை ஒழுங்கு செய்யட்டுமா'' எனக்கேட்டார். நான் யோசித்தேன்.

கைலாசபதி முறுவல் பூத்துவிட்டு
''தினகரன் பத்திரிகையில்பிரசுரிப்பதற்குத்
தினம் நீங்கள்கருத்தோவியம்
வரைந்தால் என்ன? நான் கலைஞனுக்குத்
தேவையான பூரண சுதந்திரம் தருகிறேன்''
என்றார். 'கலைஞனுக்கு பூரணசுதந்திரம்'
என்றதும் என்மனம் பூரித்தது. ''ஓம்
வரைகிறேன்'' என்றேன். நான் கருத்து
ஓவியம் தீட்டுவதற்குத்தந்தக் கோபுரவாசம்
செய்யவில்லை. புழுதி புத்திரனானேன்.
சிறுவனாக கரவெட்டியில்
புழுதியில் விளையாடியதெல்லாம்
'வீடியோ'வாக விரிந்தது. சவாரித்தம்பர்
என்ற அறிஞர் அன்று இருந்தார்.
அவர் திண்ணையின் தலைமாட்டில் அறிவு
நூல்கள் பல இருந்தன.



பெரும்பாலானது இடதுபக்கம்
சாயும். அவர் என்னை,
இராமசாமிப் பெரியாரின்
(ஈ. வே, ரா) ஒரு புத்தகம்
தந்து உரக்க
வாசிக்கச் சொல்லிவிட்டு
'அப்பலோ' சிலை மாதிரி உட்கார்ந்து
கேட்டுக் கொண்டு இருப்பார். இப்படி
பல நாட்கள் பல
புத்தகங்கள்
வாசித்திருக்கிறேன். அவர் சாதாரணமாக
உரையாடும் போது கார்ல் மார்க்ஸ்,
லெனின், ராமசாமி பெரியார்
போன்ற பெரியார்களை மேற்கொள்
காட்டிப் பேசுவார். ராமசாமிப் பெரியார்
யாழ்ப்பாணம் வந்து கரவெட்டியிலும்,
சங்கானையிலும் கூட்டங்கள்
நடத்தியதாகக் கூறினார்.
சவாரித்தம்பர், தத்துவஞானி
சோக்கிறற்றீஸ்
போன்று கரவெட்டிச் சந்திகளில் நின்று
உரையாற்றுவது
சர்வசாதாரணமான காட்சி.
இவர் பேசும் சீர்திருத்தக் கருத்துக்களை
கேட்க ஒரு கூட்டமே அவரைச்சுற்றி நிற்கும்.
அவர் அன்று திராவிடக்கழகம்
வெளியிட்ட குடியரசுப் பத்திரிகையை
வரவழைத்தார்.
அதை நெல்லியடி மடத்தில்
கந்தவனம் (ஐயா) வாசிக்க எல்லோரும்
ஞான ஒடுக்கத்திலிருந்து கேட்பார்கள்,
இதனால், குடியரசுப்
பத்திரிகையின்
பெயர் சிலருடன்
ஒட்டிக்கொண்டது.
இதில்
குடியரசு கந்தப்பு,
குடியரசு-
சின்னையா மிகவும்
பிரபல்யமானவர்கள்.
சிறுவயதிலேயே
சவாரித்தம்பரில்
ஒரு மதிப்பு
ஏற்பட்டுவிட்டது.
சவாரித்தம்பரை
முக்கியபாத்திரமாக
வைத்துமூன்று
கருத்துப்படங்கள்
வரைந்து கைலாசபதியிடம்
காட்டினேன். கைலாசபதியின் முகத்தில்
புன்னகை பூத்தது. ''சுந்தர்...
இது உம்முடையதுறை.
நீங்கள் தூரிகை ஏந்தியவர்கள்.
ஒருதுறையிலுள்ளவர் மற்றத்துறையில்,
துரைத்தனம் காட்டுவது முட்டாள்தனம்''
என்றார் அந்த அறிஞர். தொடர்ந்தேன்.
'சவாரித்தம்பர்' மக்கள்நாயகம்
ஆனார். 'சவாரித்தம்பர்' மக்கள்
மத்தியில் பெரும் வரவேற்பைப்பெற்றது.
பாராட்டுக் கடிதங்களாகவும்,
கவிதைகளாகவும் தினகரன்
காரியாலயத்திற்கு வந்து குவிந்தன.
திரு. கைலாசபதி அவர்கள்

உற்சாகத்துடனும் பெருமிதத்துடனும் எல்லாவற்றையும் தினமும் பிரசுரித்து எனக்கு ஊக்கம் கொடுத்தார். முத்தையா அவர்கள் ''விடிவெள்ளி'' என்ற புனைபெயரில் ''தம்பர் புராணம்'' என்ற பெரிய கவிதையை அனுப்பியிருந்தார் திரு. கைலாசபதி அவர்கள் அக்கவிதையை அப்படியே பிரசுரித்து என்னை மகிழ்வித்தார்.

அதில் சிலவரிகள்-

''தம்பரினைக் காணாத நாளெல்லாம்
நமக்கு இங்கு பிறவா நாளே''

என்று எழுதியிருந்தார். தம்பர் கருத்தோவியத்திற்குக் கிடைத்த வரவேற்பே 'சிரித்திரன்' தொடங்குவதற்கு ஒரு உந்துசக்தியைக் கொடுத்தது.

●● சிரித்திரன் என்ற நகைச்சுவைப் பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் தோன்றியதற்கு காரணம் என்ன?

□□ இறக்குமதிச் சிரிப்பையோ, இரவல் நகைச்சுவையை இறக்குமதி செய்வதையோ நான் விரும்பவில்லை. எங்கள் மனம் மலரவேண்டும் எங்கள் தனித்துவம் தழைக்க வேண்டும் என்ற மன உந்தலிலேயே சிரித்திரனை ஆரம்பித்தேன். யாழ்ப்பாண வளச் சொல்லாகிய 'சிரித்து இரு' என்றதை 'சிரித்திரன்' ஆக்கினேன்.

●● இன்றைய போராட்டச் சூழலில் படைப்பு இலக்கியத்தின் பங்கு எவ்வாறு அமையவேண்டும் எனக் கருதுகிறீர்கள்?

□□ பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் துப்பாக்கி முனையால் மட்டுமல்ல தூரிகை முனை, பேனா முனை இவைகளாலும் காப்பாற்ற முன்வரவேண்டும். மாதாவின் மைந்தன், மண்ணின் மைந்தன் என்று உதட்டினால் மட்டும் பேசினால் போதாது. நாம் அதற்காக உழைக்கவும் வேண்டும்.

●● நீங்கள் சவாரித்தம்பர் சித்திரத்தை நீண்டகாலம் வரைந்தீர்களே! அதில் சுவையான கருத்தோவியங்கள் சிலவற்றைக் கூறமுடியுமா?

□□ சில நினைவுகள் குமிழிவிடுகின்றன.



சவாரித்தம்பரின் மூத்தமகன் நடமாடும் புகைபோக்கி. ஒருநாள் அவன் தன் அறைக்குள் 'சிகரெட்' புகைப்பதை தம்பர் யன்னலூடாகப்பார்க்க நேர்ந்தது. அவர் உடனே வாழைத் தோட்டத்திற்குள் போய் வாழைக்குலை ஒன்றை வெட்டி வந்து மகன் படுக்கும் கட்டிலின் மேலே தூக்கிவிட்டு ''தம்பி நல்லா ஊது மேனை வாழைக்குலை பழுக்கட்டும்'' என்றார்.

பண்டாரநாயக்கா காலம் இனக் கலவரம் நடந்தது.

தமிழ் மக்கள் றோயல் கல்லூரியில்
அகதியாக இருந்துவிட்டு கப்பல்
மூலம் யாழ்ப்பாணம்
வர நேர்ந்தது.
அப்படி வந்த நாகரீக பெண் ஒருவரை
தம்பர் சந்தித்தார். ''பிள்ளை
கலவரத்தால் பாதிக்கப்படவில்லையோ''
எனக் கேட்கிறார். அப்பொழுது
அப்பெண் அவரை வீட்டுக்குள்
அழைத்துச்சென்று தன்
அலுமாரியைக் காட்டுகிறாள்.
அதற்குள் வெள்ளிக் கோப்பைகள்
அடுக்கப்பட்டு இருந்தன.
அவைகளைக்
காட்டி இந்தக்
கோப்பை
கேக் தயாரிக்கும்
போட்டிக்கு
கிடைத்தது.
இந்தக்கோப்பை
நாய் வளர்ப்புப்
போட்டிக்குக்
கிடைத்தது
என்று
கூறிக்கொண்டு
போகையில்
தம்பர் இடை
மறித்து,
''பிள்ளை அது
சரி நீங்கள்
அகதியாக
றோயல்
கல்லூரியில்
இருந்தபோது சாப்பிடுவதற்குத்
தந்த கோப்பை எங்கே? அதுதானே எங்கள்
சரித்திரம்'' எனக் கூறுகிறார்.
தம்பரின் மூத்த மகன் 'கிளறிக்கல் கிளாஸ் ரூ'
எடுப்பதற்கு ஊருக்கும் வராமல்
படித்துக்கொண்டு இருந்தான். பாறிமாமி
மகன் சோதினை பாஸ் பண்ண
வேண்டும் என்று கந்தஷஸ்டி விரதம்
பிடித்துக்கொண்டு மகனுக்கு
எள்ளுப்பாகு, நல்லெண்ணை, முட்டைமா
எல்லாம் கொடுத்து தம்பரையும்
சின்னக்குட்டியையும்
கொழும்பிற்கு அனுப்புகிறார். யாழ்தேவி
இரவு 12 மணிக்கு கொழும்பு போய்ச்
சேர்ந்தது. தம்பரும் சின்னக்குட்டியும்

மகனின் அறையை நோக்கி
வருகின்றனர்.
மகனின் அறையில் 'லைட்' எரிந்துகொண்டு
இருக்கிறது.
மகன் இரவிரவாகக் கண்விழித்துப்
படிக்கிறான் என்று தம்பருக்குப் பெரிய
சந்தோசம். அறையை நெருங்கியதும்
மகனின் அருகில் சாராயப் போத்தல்
இருப்பதைக் காணுகின்றனர். அப்போது
''அடி கம்மார்ஸ்'' என்று மகனின்
குரல் கேட்கிறது.
தம்பர் அறையைத் திறந்து
உள்ளே போய்
''தாய் மூன்று
மிளகும்
தண்ணியும்
மகன் இங்கு
304 உம்
தண்ணியும்''
என்று
கூறுகிறார்.

●● உங்கள்
சித்திரகானம்
பிரபல்யமாக
இருந்தது.
அதிலும் சில
கூறமுடியுமா?

□□ மூன்று
உயரிப்பனையை
வரைந்து அதற்குக் கீழ் ''பஞ்சம் ஏதடா
பசியும் ஏதடா பாரில் உயர்ந்த நம்
நாட்டில்'' என்று எழுதியிருந்தேன்.
மற்றொன்று ...... ஒருவர் ஒரு
ஆட்டுக்குக்கையால் குழை
கொடுத்துக் கொண்டு
கத்தியுடன் அதை கொலை செய்வதற்கு
அழைத்துக்கொண்டு போகிறார்.
அதற்கு ''வாராய் நீ வாராய்
போகுமிடம் வெகுதூரமில்லை''
என்று எழுதினேன்.
மற்றொன்று ஒரு பெண், கார் ஓட்டிக்
கொண்டு போகும் பொழுது காரை
வேலிக்குள்ளால் விட்டுவிட்டார்.
அதற்கு ''என் வாழ்வின்

> ''என்னைப் பாரிசவாத நோய் பாதித்து, என் கருத்துக்களை மக்களுக்கு கூறமுடியாதுபோய்விட்டதே என்று வருத்தப்பட்டேன். சோர்ந்து போயிருந்த என் மனநிலையை உணர்ந்து, மீண்டும் சிரித்திரனை வெளிவரச்செய்த எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களுக்கு எவ்விதம் நன்றி கூறுவது என்று தெரியாமலிருக்கின்றேன்.''
>
> —சிவஞானசுந்தரம்

புதுப்பாதை கண்டேன்'' என்று எழுதினேன்.

●● உங்கள் வாழ்க்கைப் பின்னணி, இள மைப் பிராயம், இந்தியாவில் கட்டடக்கலை மாணவனாக இருக்கும் போது ஏற்பட்ட அனுபவம் ஆகியன பற்றி விரிவாகக்கூறுங்கள்?

□□ என் மாணவப் பருவம் புரிந்துணர்வு இல்லாத ஆசிரியரால் பாலைவன யாத்திரையாகவே இருந்தது.
என் தந்தை தபால் இலாகாவில் உயர் பதவியில் இருந்தபடியால் என்னையும் உயர் பதவி வகிக்கவேண்டும் என்று விரும்பினார்.
பிள்ளைப்பாசத்தில் நான் நன்றாகப் படிக்க வேண்டும் என்று கனகாபிஷேகம் செய்தார்.
ஆனால் பட்டம், பதவி, பதக்கம் ஒன்றையும் நான் நாடவில்லை.
ஓவியம் ஒன்றே என் ஆராதனையாக இருந்தது. நான் பம்பாய்க்கு கட்டடக்கலை படிக்கச் சென்ற காலம் இந்தியா, தன் சுதந்திரத்திற்கு போராடிக்கொண்டு இருந்தது.
நான் அப்பொழுது தாதர் நகரில் வசித்து வந்தேன். நேதாஜியின் பிறந்த தினம் வந்தது. என்னை நேதாஜியின் பெரியபடம் ஒன்று வரைந்து தரும்படி அந்நகர மக்கள் கேட்டார்கள்.
வரைந்தேன். பாராட்டுப் பெற்றது. அப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. கரிக்கேச்சர் (*Caricature*) என் இயல்பான கலை.
எங்கள் பாடசாலைக் கலைவிழாவின் போது இந்தியப்பிரமுகர்கள், பாடசாலை ஆசிரியர்களை மேடையில் வரைந்து அமோக வரவேற்பையும், பாராட்டுக்களையும் பெற்றேன். பம்பாயின் சில பத்திரிகைகளுக்கும் கருத்தோவியம் வரைந்தேன். 'பிளீட்ஸ்' (*Blitz*) பத்திரிகையில் தான் என் முதல் கருத்தோவியம் முதல் பக்கத்தில் பிரசுரமாகியது.
இலங்கையில் வெள்ளவத்தை இருப்பது போன்று பம்பாயில் மாதுங்கம் என்ற நகரம் உண்டு. அங்கே சங்கீத சபாக்கள் நிறையவுண்டு.
அங்கு தென்னிந்தியாவின் பிரபல சங்கீத வித்துவான்கள் எல்லோரும் வந்து கச்சேரி செய்வார்கள்.
மாதுங்காவில் பாரதிவிழாக் கொண்டாடினார்கள்.
விழாவிற்குப் போயிருந்தேன்.
''யாமறிந்த மொழிகளிலே தமிழ்-மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்''
என்ற பாரதியின் பாடலை ஒரு பாடகி கனிவாகப் பாடிக் கொண்டிருந்தார்.
ஹிந்துஸ்தானி, மராட்டி, குஜராத்தி பேசிய பம்பாயில் ''தமிழ் மொழி போல் இனிதான'' என்ற பாடல் கேட்டதும் மெய்மறந்தேன்.
பெரும் எழுத்தாளர்கள் எல்லாம் பேசினார்கள்.
பாரதியின் நண்பர் வா. ரா எழுந்து பாரதியின் நினைவுகள் பற்றிப் பேசினார்.
தான் வீரகேசரி ஆசிரியராக இருந்ததையும் கூறமறக்கவில்லை.
இதன் முன் பம்பாயில் நான் ஓவியக் கண்காட்சியைத் தரிசிப்பதற்குப் போவேன்.
ஆனால், ஓவியங்களைப் பார்ப்பதில்லை.
ஒரு ஆசனத்தில் இருந்து கண்ணீர் வடித்து விட்டு வீடு திரும்புவேன்.
என்மன உளைச்சலில் ''நான் ஓவியக்கலை பயில விரும்புகின்றேன்'' என்று தந்தைக்குத் தந்தி கொடுப்பேன்.
தந்தை ''கட்டடக் கலையைத் தொடரவும்'' என்று பதில் தருவார்.
நான் அவர் ஆணைக்குப் பணிந்து கட்டடக் கலையைத் தொடர்ந்து படித்தேன், ஆயினும் ஓவியக்கலையிலேயே ஈடுபாடு அதிகமாகவிருந்தது. அவ்வேளையில்தான்

சிவசேனைத் தலைவர் திரு. பால் ரக்கறே (*Pal Tacheray*) யின் அறிமுகம் கிடைத்தது. அவர் தன்னுடைய கருத்தோவியம் ஒன்றைத் தந்தார். அதுவே என்னுடைய ஓவிய வழிகாட்டியாக அமைந்தது.

சென்னையிலிருந்து பம்பாய் நோக்கிய பயணமொன்றின் போது எதிர்பாராமல் சந்தித்தார் ஒரு மனிதர். அந்தப்பயணம் முடியும் வரையிலும் அவர் யாரெனத் தெரியாது பின்னர் ஒருநாள் பம்பாய் குறோனிக்கல் அலுவலகத்தில்



அந்த மனிதரைக் கண்டு உரையாடும் போது தான், அவர்தான் இந்தியாவின் முக்கியமான கார்ட்டூனிஸ்ட் அபூ (*Abu*) ஏப்ரஹாம் என்பது தெரிந்தது. அவரும் ஓவிய முறைமை பற்றிச் சில கருத்துக்களைச் சொன்னார். இவையெல்லாவற்றின் பின் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத தனயனாக ஊர் திரும்பினேன். (ஆனால் தந்தையின் விருப்பப்படி கட்டிடக் கலைஞனாக நான் தேறாது விட்டாலும் இன்று எனது மருமகன் ஒரு கட்டிடக்கலைஞனாக படித்துத் தேர்ந்திருக்கிறார்)

இலங்கையில் என். எம் பெரேராவின் வேண்டுகோளுக்கிணங்க 'ரொட்ஸ்கி' 'லெனின்' ஆகியோரின் இருபடங்களை அவருக்கு வரைந்து கொடுத்தேன். அவரின் கட்சிப் பத்திரிகைக்கும் கருத்தோவியம் வரைந்தேன். நான் வரைந்த கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியின் படம் இன்றும் கொழும்பில் அருங்காட்சிச்சாலையில் இருக்கின்றது. கைலாசபதி என்னை யாரென்று எனக்கு அறிமுகப்படுத்தினார், அதற்குப் பின்பே 'சவாரித்தம்பர்' வெளி வந்தது. சில காலம் முரசொலிக்கும் கருத்தோவியம் வரைந்தேன். உரிமையாளர் சிவராசா கருத்தோவியத்தின் கனமறிந்து கனகமாகவழங்கி என்னை உற்சாகமூட்டினார். பின்பு என்னைப் பாரிசவாத நோய்பாதித்தது என்கருத்துக்களை மக்களுக்குக் கூறமுடியாது போய் விட்டதே! இனி உயிர்வாழ்ந்து என்ன பலன் என்று விரக்தியின் விளிம்பில் சோர்ந்து போய் இருந்த பொழுது எமது தமிழீழத் தேசியத் தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள் என் மனநிலையை உணர்ந்தோ என்னவோ சிரித்திரன் மீண்டும் வெளிவர வேண்டுமென்று விரும்பினார். சோர்ந்திருந்த என் உணர்வுகள் விழித்தெழுந்தன. வலது கையால் எழுதவோ வரையவோ முடியாத நிலை. இடது சாரியானேன். கடும்பயிற்சியின் பின் இடது கை இசைந்தது

இன்று மீண்டும் சிரித்திரன் மக்கள் மத்தியில் பவனி வருகின்றான். ஒரு கலைஞனின் உள்ளத்தை உணர்ந்து மீண்டும் சிரித்திரனை வெளிவரச் செய்த எமது தலைவர் திரு. பிரபாகரனுக்கு எவ்விதம் நன்றி கூறுவதென்று தெரியாமல் இருக்கின்றேன்.

□□ பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும்தொடர்ச்சியாக30 வருடங்களாக சிரித்திரனை வெளியிட்டு வருகின்றீர்களே! இந்த நீண்டகால விடா முயற்சியில் நீங்கள் பெற்ற அனுபவங்கள் பற்றியும் ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவங்கள் பற்றியும் விளக்கமாகக் கூறுவீர்களா?



●● தாயானவளுக்குப் பிரசவவேதனை. பத்திரிகையாளனுக்குப் பிரசுர வேதனை. ஆனால் நான் அரசாங்க உத்தியோகத்தை விட்டு சிரித்திரன் தொடங்கியபொழுது. என்வீட்டிலும், துணைவியார் வீட்டிலும் பலத்த எதிர்ப்புப் புயல் தோன்றியது. நாம் அதையும் மீறி சிரித்திரனைத் தொடங்கினோம். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கடனுதவியே எமக்குக் கைகொடுத்தது. சிரித்திரன் குடிசைக் கைத்தொழிலாகவே ஆரம்பமானது. என் பிள்ளைகள் 'ஒற்றை ஒற்றையாகச் சேர்த்து' சிரித்திரனை உருவாக்குவார்கள். இலக்கிய ஆர்வமும் நிர்வாகத் திறமையுமுள்ள என் துணைவியார் என்னுடன் ஒத்துழைத்தபடியாலேயே என்னால் சிரித்திரனைத் தொடர்ச்சியாக வெளியிடமுடிந்தது. இந்தியாவில் இன்று சிறைவாசம் அனுபவிக்கும் ராதேயன் சிரித்திரனுக்கு கதை, கவிதை, எழுதியது மட்டுமல்ல து இரவு பகலாக சிரித்திரன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். அவரின் பங்களிப்பு சிரித்திரன் சிறப்புப்பெற பெரிதும் உதவியது. டாக்டர் சுகுமார் அவர்களின் முயற்சியால் சிரித்திரனில் வெளிவந்த கருத்தோவியங்களைத் தேர்ந்து, தொகுத்து 'சிரித்திரன் சித்திரக் கொத்து' என வெளிக்கொணர்ந்தோம். 'சித்திரக் கொத்து'வுக்கு ஸ்ரீலங்கா அரசு 1991இல் 'சாகித்திய மண்டலப் பரிசு' வழங்கியது. 'குண்டின் நிழலில் பரிசா' எனக் கூறி அதனை நிராகரித்து விட்டேன். யாழ்ப்பாணத்தில் சிரித்திரன் அச்சிடுவதற்கு ஒரு அச்சகம் நிறுவினோம். சிரித்திரன் ஒழுங்காக வெளிவந்துகொண்டிருந்தது. அமைதிப்படை (இந்திய இராணுவம்) வந்தபின் சிரித்திரன் வரமுடியாமல் போய்விட்டது. அச்சுக்கூடம் இயங்காமல் ஆனது. அத்துடன் சேகரித்து வைத்திருந்த என்னுடைய காட்டூன்கள், இந்தியாவில் இருந்து கொண்டுவந்திருந்த முதல் பிராயத்து ஓவியங்கள், சிரித்திரனின் பிரதிகள், புதிய சிரித்திரனுக்காக அச்சிட்டிருந்த தாள்கள் எல்லாமே அமைதிப்படையால் வீதியெங்கும் வீசப்பட்டன. நாங்கள் வீட்டை விட்டு இடம் பெயர்ந்திருந்த

வேளையில் இவையெல்லாம்
நடந்தன.
சில நாட்களின் பின் நாம்
வீட்டிற்குத் திரும்பி வரும் பொழுது
சிரித்திரனுக்காக அச்சடித்த தாளில்
பொருட்களைச் சுற்றிச்
சென்றனர் பொது மக்கள்.
இதனைக் காணும் வேளையில்
மனத்துயரைச் சகிக்க முடியவில்லை.
இது ஆறாத வடுவாக
இன்னுமுள்ளது. அத்துடன் நண்பர்களின்
எழுத்துப்பிரதிகள் பலவும் அழிந்து
போயிற்று. இவற்றில் கவிஞர் காசி-
ஆனந்தனின் 'மாத்திரைக் கதைகளின்'
தொகுப்பிற்கான எழுத்துப் பிரதிகளும்
அடங்கியிருந்தன.

□□ உங்கள் மகுடிக்கு மக்கள் மத்தியில்
மகத்தான வரவேற்புண்டு. நகைச்
சுவையென்றும், அரசியல் என்றும்,
தத்துவம் என்றும் மகுடி ஊதுகிறீர்களே!
உதாரணத்துக்குச் சில
கூறமுடியுமா?

●● ''உமது வாழ்க்கை வெற்றியா
தோல்வியா'' என்னைப் பொறுத்தவரை
வெற்றி. என் உறவினரைப்
பொறுத்த வரை பெருந் தோல்வி.
''எமது அரசியல்பார்வை குருடா''
ஒற்றைக் கண்ணன் சோல்பரியின்
தூரதிருஷ்டப் பார்வை
இல்லாத காரணத்தால் குட்டிமணியின்
இரு கண்களும் தோண்டப்பட்டன.
''வாழ்க்கை பற்றி என்ன நினைக்கிறீர்''
இன்னலும் கன்னலும் பின்னலாகிய
மின்னல்.

□□

● ● ● ●

மொழி, கலை, கலாசாரம் என்பன, ஒரு தேசிய இனத்தின் கட்டமைப்பிற்குத் தூண்களாக விளங்குகின்றன. ஒரு தேசியத்தின் ஆன்மாவாகத் திகழ்கின்றன. ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திவாரமாக அமைகின்றன.

மொழியும், கலையும், கலாசாரமும் வளம்பெற்று, வளர்ச்சியும், உயர்ச்சியும் அடையும் பொழுதே, தேசிய இனக்கட்டமைப்பு இறுக்கம்பெறுகிறது. பலம் பெறுகிறது. தேசிய நாகரிகம் உன்னதம் பெறுகிறது. மனித வாழ்வும் சமுக உறவுகளும் மேன்மை பெறுகிறது.

—தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

● கவிதை ●

● போராளியின் பேனாவிலிருந்து ●

# புயற் பிரவேசம்

○○

தூயவன்

பூநகரியில் சிங்களம்
எம்மக்கள் சிரங்களைச் சீவியதால்
சிவந்தது யாழ்நீரேரி மட்டுமல்ல
கரும்புலிகள் கண்களுமே

கொடும் பகை குடல் எடுக்க
நெடும் வெற்றி நமதாக்க
உடல் உடையிடை
கடலூரிமண் உராய்வெடுக்க
உதிரம் கசிந்து உறைந்திட
நெடுநாளாய்ப் பயின்றனர் புலிகள்
அவர்களின் இரவுகள் பகல்களாயின.

அவன் மூச்சின் ஓசையும்
சிறு அசைவின் காற்றிசைவும்
புலன்களால் உணர்ந்திட
வேவுப் புலிகள் கடமை தொடர்ந்தனர்.

இருளில் புலிகள் நகர்கிறார்கள்
தமிழீழம் விடியலைத் தேடுவதால்

புயலுக்கு முந்திய அமைதியாய்
பூகம்ப ஆரம்பக்கண அமுக்கமாய்
வியூகம் அமைத்த புலிகள்
பூநகரியில் புயற்பிரவேசம் செய்கிறார்கள்.

உடல் தாங்க முடியாக் குளிருடன்
கடல் கடக்கமுடியா நீரோட்டமுடன்
காற்றும் மழையும் பயணத்தைக்
கடினமாக்கப் போட்டியிட்டன.

ஆயினும், புலிகளுக்கு
அவை உறைக்கவில்லை

பேயாகி நின்றவர் தமிழரை
பிணமாக்கித்தின்றவர் மன
நோயாளிகளாக மாறத்தொடங்கினர்.

வெடிமருந்தாயினர் புலிகள்
விடியுமுன் வானம் ஒளிர்ந்தது ஒருகணம்
வேட்டுக்களாக மாறினர்
பகைவன்
கேட்டுணருமுன்னரே வீழத்தொடங்கினான்.

ஓராண்டின் உழைப்பால் தான்
உருவாக்கிய திட்டமதை
கரிகாலன் கையாண்ட திறனால்
பார் முழுதும் எமைச் சிலமணியில்
நேராக நோக்கி நின்றது.
பகை விசைப்படகுகள் எம் வசமாகின.
'செக்கோசெலவாக்கிய' டாங்கிகள் உடன்
செல்லப்பிராணிகளாயின
சிசிலின் பதக்கங்கள் சிதை ஏறின
ஆம்
எங்கள் கால்களைத் தடக்கியவை
மரக்கட்டைகளும் கற்களுமல்ல
மாறாக
எதிரியின் உடல்களும் ஆயுதங்களுமே-

# ஈடாட்டம்

ஒ

வளநாடன்

● நாடகம் ●

அரங்கின் திரை விலகுகிறது. அரங்கின் நடுப்பகுதியில் 'சுதந்திரம்' என்று எழுதப்பட்ட மரக்குற்றியும், அரங்கின் இடது நடுப்பகுதியில் ''பேச்சுவார்த்தை'' என்று எழுதப்பட்ட மரக்குற்றியும், வலது நடுப்பகுதியில் ''போராட்டம்'' என்று எழுதப்பட்ட மரக்குற்றியும் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. மேடையில் ஒளியும் இசையும் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. இசையின் வேகம் கூடிக்குறைகிறது. ஒளி அணைந்து, ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. இதே நேரத்தில் அவலச்சத்தங்களும் கேட்டவண்ணம் இருக்கின்றன. பத்து வினாடிகளில் இவை யாவும் சடுதியாக நிற்கின்றன. மேடையில் ஒளி முழுமையாகப் பரவி இருக்கிறது. திரும்பவும் மேற்குறிப்பிட்டது போலஒளி - ஒலி நிகழ்கிறது. இப்படி மூன்று முறை சம்பவம் தொடர்கிறது. மூன்றாவது முறை இந்நிகழ்வு முடிகின்ற வேளையில் ஒருவன் பார்வையாளரின் பின்பகுதியில் இருந்து அவலக் குரலோடு ஓடி வந்து அரங்கின் நடுப்பகுதியில் வீழ்ந்தான்.

அந்தப் பாத்திரம் ஏற்று நடிக்கும் மனிதனின் உடை, நாம் அன்றாட வாழ்வில் பாவிக்காத உடையலங்காரமாக இருக்கின்றது. ஒப்பனையும் சாதாரண ஒப்பனையை விடுத்து ஓரளவு விடுபட்டதாகத் தென்படுகிறது. அந்த மனிதன் மேடையில் வீழ்ந்து கொண்டிருக்கும் அதே வேளையில் இசை சோகத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. '(பொதுவாக இந்நாடகத்தின் இசை குறிப்பிட்ட இடங்களில் அவலத்தை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது.) மனிதன் நிமிர்ந்து பார்க்கும் போது ''பேச்சுவார்த்தை'' என்ற மரக்குற்றி அவனின் தலைக்குக் கிட்டவாக வந்து நிற்கிறது. இதே நேரத்தில் ''போராட்டம்'' என்ற மரக்குற்றியும் கீழிறங்கி மேற்கிளம்புகிறது அதைக் கண்ணுற்ற மனிதன் நிமிர்ந்து எழுகின்றான். அப்பொழுது ''பேச்சுவார்த்தை'' என்ற மரக்குற்றியும் மெல்ல மெல்ல மேற்கிளம்புகிறது. மனிதன் அதைப் பிடிக்க பல பிரயத்தனங்கள் செய்கின்றான். ஆனால் அது மேற்கிளம்பி விடுகின்றது. அதனால் அந்த மனிதன் சோர்வடைந்து நிலத்தில் வீழ்கின்றான். இதே நேரத்தில் 'போராட்டம்'' என்ற மரக்குற்றி கீழிறங்கி, மேற்கிளம்புகிறது. வீழ்ந்து கிடக்கும் மனிதனின் தலையருகே ''பேச்சுவார்த்தை'' என்ற மரக்குற்றி வந்து நிற்கின்றது. இதைப் பார்த்த மனிதன் மெல்லத் தலையைத் தூக்கி அதைப்பிடிக்கப் பிரயத்தனம் செய்கின்றான். அப்பொழுது அம்மரக்குற்றி மேற்கிளம்புகிறது. மேறகிளம்புகின்ற மரக்குற்றியை அம்மனிதன் எட்டிப்பிடித்துக் கீழே இழுத்துக் கொண்டு வருகின்றான். ஆனால் அம்மரக்குற்றி மனிதனின் கைப்பிடியில் இருந்து விலகி மேற்கிளம்புகின்றது. இதன் பின்பும் மனிதன் சோர்வடைந்து நிலத்தில் வீழ்கின்றான். அப்பொழுது ''போராட்டம்'' என்ற மரக்குற்றி கீழிறங்கி மேற்கிளம்புகின்றது. பின் ''பேச்சுவார்த்தை'' என்ற மரக்குற்றி மனிதனின் தலையருகே வந்து நிற்கிறது. அதைக்கண்ட அம்மனிதன் சந்தோசமிகுதியால் ''பேச்சுவார்த்தை'' என்ற மரக்குற்றியை எட்டிப் பிடிக்கின்றான். ஆனால் அவனது கைப்பிடியை விட்டு ''பேச்சுவார்த்தை'' என்ற மரக்குற்றி மேற்கிளம்பி விடுகின்றது. ''பேச்சுவார்த்தை'' என்ற மரக்குற்றி அவனது கைக்கு எட்டாமல் இருப்பதால் கோப

மூற்ற மனிதன் அதனோடு சண்டை பிடிக்கின்றான். ''பேச்சுவார்த்தை'' என்ற மரக் குற்றிக்கும் மனிதனுக்கும் இடையில் இழுபறி நடக்கின்றது. அந்த இழுபறியை நோக்க நடனக்கோலம் போலத் தோன்றுகின்றது.

பின்னர் ''போராட்டம்'' என்ற மரக் குற்றிப்பக்கம் சென்று அந்தப் போராட்டக் குற்றியைப் பிடிப்பதற்கு பிரயத்தனம் செய்கின்றான். அது நடனக்கோலம் போல அமைந்திருக்கின்றது. போராட்டம் என்ற மரக்குற்றியை எட்டிப்பிடித்துக் கீழ்க் கொண்டு வரும் போது பேச்சுவார்த்தை என்ற மரக்குற்றியும் தானாகக் கீழே இறங்கி வருகிறது. பேச்சுவார்த்தை என்ற குற்றி கீழ் இறங்குவதைக்கண்ட மனிதன் போராட்டக் குற்றியை விட்டுவிட்டு பேச்சுவார்த்தைக் குற்றியின் பக்கம் பாய்ந்து ஓடுகின்றான். பேச்சுவார்த்தை என்ற குற்றி மனிதனைக் கண்டதும் அது மேற்கிளம்புகின்றது. இதனால் சோர்வுற்ற மனிதன் திரும்பவும் போராட்டம் என்ற மரக்குற்றியை இறுகப் பிடிக்கின்றான் அதே வேளை ''சுதந்திரம்'' என்ற குற்றி மெல்ல (ஓரளவு) கீழிறங்கி நிற்கின்றது. பேச்சுவார்த்தை என்ற குற்றி திருப்பவும் கீழிறங்கி வருகின்றது. இதைக் கண்ணுற்ற மனிதன் போராட்டக் குற்றியை கைவிட்டுவிட்டு திரும்பவும் பேச்சுவார்த்தைக் குற்றியைத் தன் கையிடுக்கினுள் இறுகப்பற்றிக்கொண்டு போராட்டக் குற்றியின் பக்கம் சென்று மறு கையிடுக்கினுள் போராட்டக் குற்றியை இறுகப் பற்றிக்கொள்கின்றான். இரண்டு குற்றிகளும் மேலெழும்ப முயற்சிக்கிறன.

அதைவிடும் நோக்கமில்லாத மனிதன் இருபக்கமும் இழுபறிப்படுகின்றான். சிறிது நேரத்தின் பின் (இருபது விநாடிகளின் பின்) பேச்சுவார்த்தை என்ற மரக்குற்றியைக் கைவிட்டுவிடுகின்றான். பேச்சுவார்த்தை என்ற மரக்குற்றி மேற்கிளம்பி சிறிது நேரத்தின் பின் கீழிறங்குகிறது. திரும்பவும் மனிதன் பேச்சுவார்த்தை என்ற குற்றி கீழிறங்குவதைக் கண்ணுற்றதும் ஓடிச்சென்று பிடித்து கையிடுக்கினுள் இறுகப் பற்றுகின்றான். திரும்பவும் போராட்டப் பக்கமும் பேச்சுவார்த்தைப் பக்கமும் இழுபறிப்படுகின்றான். பேச்சுவார்த்தை என்ற மரக்குற்றி திரும்பவும் மேற்கிளம்புகின்றது. பின்னர் கீழிறங்குகின்றது. கையிடுக்கினுள் குற்றியை இறுகப்பிடித்து வைக்கின்றான். திரும்பவும் போராட்டத்தின் பக்கமும் பேச்சுவார்த்தையின் பக்கமும் இழுபறிப்படுகின்றான். திரும்பவும் பேச்சுவார்த்தை என்ற குற்றி மேற்கிளம்புகின்றது.

இதனால் ஆத்திரமுற்று மிகக் கோபாவேசமாக ஆடுகிறான். ஆடியபின் போராட்டக் குற்றியை நிலத்தில் இழுத்து வைத்துவிட்டு சுதந்திரம் என்ற மரக்குற்றியைப் பிடிக்கப் பிரயத்தனம் செய்கின்றான். சுதந்திரம் என்ற மரக்குற்றி மெல்ல அவனது கைக்குக் கிட்டுகிறது. பின் மனிதன் சுதந்திரத்தை இறுகப் பிடித்து நிலத்தில் வைத்துவிட்டு மகிழ்ச்சியில் ஆனந்த நடனம் ஆடுகின்றான். இந்த வேளையில் பேச்சுவார்த்தை என்ற மரக்குற்றி மேடையின் அரைவாசிப் பகுதியில் தொங்குகிறது. அதனை மனிதன் சற்றேனும் பார்க்காது ஆனந்த நடனம் ஆடுகின்றான்.
(அரங்கின் திரை மூடுகிறது) □□

''நான் கலை, இலக்கியங்களை மதிப்பவன்; ரசிப்பவன். கலை, இலக்கியப் படைப்பாளிகளை கௌரவிப்பவன்; கலை கலைக்காக அல்லாமல், மக்களுக்காகவே படைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக்கொண்டவன்.

கலை இலக்கியப் படைப்புகள் மக்களைச் சிந்திக்கத் தூண்டவேண்டும் பழைமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக்கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையை தோற்றுவிக்க வேண்டும். மாறிவரும் சமூக புறநிலைகளுக்கு ஒத்திசைவாக சமூக விழிப்புணர்வை உருவாக்கவேண்டும்''

—*தமிழீழத் தேசியத்தலைவர்*
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

● நூல் மதிப்பீடு ● என் இனியவளுக்கு
(கேணல் கிட்டுவின் கடிதங்கள்)

# முதிர்ந்து கனிந்த கனிவுள்ளத்தில் ஊற்றெடுத்த உணர்வுகள்

ஓ
ஓ

வே. பாலகுமாரன்

கிட்டு அவர்கள் தனக்கு இனியவளான துணைவியாருக்கு எழுதிய மடல்களைத் தொகுத்து 'என் இனியவளுக்கு' எனத் தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள அழகிய, செய்நேர்த்தியான சிறுநூலைக் கையிலெடுத்தவுடனே அன்புவயப்பட்ட இரு உள்ளங்களை, அவர்களுக்கே சொந்தமான தனியுணர்வுகளை உணர்வதுபோன்ற மெலிதான உணர்வு பரவியது. வாசித்து முடித்தவுடன் மனதில் தோன்றிய எண்ணங்களை எழுத்தில் வடிப்பது இயலாத காரியம் என்றேபட்டது. 1991ம்ஆண்டுத் தொடக்கத்திலிருந்து 1992ம் ஆண்டு இறுதிவரையான அவரது வாழ்வின் குறுகியதொரு காலகட்டமே இங்கு எண்ணப்பதிவுகளாகின்ற போதும் முதலில் வாசித்தபோது தோன்றும் பிரமிப்பே இதற்குக் காரணமாகின்றது. பின்னர் அப்பிரமிப்பானது மெல்ல அடங்கி ஆழ்மனதிலே அமைதிப் படிவாகப் படிந்து மனதை மௌனிக்கச் செய்து விடுகின்றது. ஏனெனில், ஒரு நிறை மனிதனின் எண்ணச் சிதறல்கள் அல்லவா இவை.

மனிதத்தேடலை- அதன் ஆரம்பத்தில் அவன் படும் அவலத்தை - பின் அத்தேடலில் இலக்குகளைத் தெளிவாக்கி, அதன் வழிகளை வகுத்து, அவ்வழியே ஆழமான முரண்பாடுகளைக் களைந்து- இவ்வாறாக கிட்டுவின் கடிதங்கள் கூறும் செய்திகள் புதுமையானவை. பொருள் பொதிந்தவை. மனிதனின் ஆன்மீகத்தேடலையும் போராட்ட வாழ்வின் அடிப்படைத்தத்துவத்தையும் ஒரு நேர்கோட்டிலேயே சந்திக்க வைத்து- அத்தத்துவக் கருவின் பின்புலத்திலே வாழ்வின் அருத்தத்தை- எவரும் வாழ்வதின் நோக்கத்தை எம்முன்னே விரியவைத்து விடுகின்றது. அவ்வகையில் தனக்கான தனது துணைவரின் எண்ணப் பகிர்வுகளை முழுத்தமிழீழ மக்களோடும் பகிர, பகிர்ந்திட முன்வந்த அவரது துணைவியாரின் அன்புள்ளம் வாழ்த்தப்பட வேண்டியதேயாகின்றது.

இந்நூலின் தொகுப்பானது மலையின் அடிவாரத்திலிருந்து அதன் உச்சியை நோக்கி ஏறும் மனநிலையை தோற்றுவிக்கும் வகையில் படிப்படியாக ஒரு கருத்துக்குவிமையத்தை ஈற்றில் அடைவாகப் பெறத்தக்கதாக அமைந்திருப்பதும் இங்கே குறிப்பிட வேண்டிய செய்தியொன்றாகின்றது. மண்ணை, மக்களை, மனதுக்குகந்த காதலியை விட்டுப் பிரிந்த அவலத்தில் தொடங்கி-பின் அவர்மனம் அமைதியாகி முத்திப் பக்குவமாகி- முதிர்ந்து ஆன்மிகத் தேடலின் எல்லையைக் கண்டு தெளிவாகி- தனது தேடலின் முடிவை எண்ணப் பெய்வுகளாகப் பெய்யும் வகையில் நூல் அமைந்து விட்டது பெரும் பேறுதான். குறிப்பாகக் கிட்டு அவர்களால் 1992ம் ஆண்டின் இறுதியில் எழுதிய நவம்பர் 07, நவம்பர் 16ம் திகதிகளிட்டு (தன் தாயார், சகோதரன், அவர் தம்மனைவி, பிள்ளைக்கு) எழுதியவை, இறுதியாக டிசம்பர் 15ல் தனது துணைவியார்க்கு எழுதியவை. தான் உய்த்துணர்ந்தவற்றில் சொல்ல வேண்டியவற்றை சொல்லிவிடும்

வேகம் தெரிகிறது. இவை ஒரு போராளி இறுதியில் பரிணமிக்க வேண்டிய உயர் நிலையை, தமிழீழ மக்கள் தம்மை அக, புற விடுதலைகட்கு தயாராக்க வேண்டிய அவசியத்தை கற்றுக் கொடுப்பதோடு மட்டும் நின்று விடவில்லை. அன்புள்ளங்கொண்டு கனிந்த இரு தூய உள்ளங்களிடையே பரிமாறப்படும் எண்ண மடல்கள் வெறும் காதற் கடிதங்களாக அமையாமல் பாரதி கூறியது போல-

''ஞானமென்ற விளக்கினை ஏற்றிக்
காலமுற்றும் தொழுதிடவேண்டும்
காதலென்பதோர் கோயிலின் கண்ணே''
- என்றாகி விடுகின்றது.

துணைவியைக் கைப்பிடித்த உடனேயே (1989ம் ஆண்டு ஐப்பசி மாத முடிவில்) நாடு விட்டுச் சென்ற கிட்டுவின் தொடக்க கடிதங்கள் அவர்பட்ட மன அவலங்களை வெளிப்படுத்தும் போது கவிதைகளேயாகி விடுகின்றன.

''என் கவிதை உனக்கு புரியாது ஏனென்றால்
நான் கவிதை எழுதவில்லை.
இதயத்தில் இருக்கும் வேதனையால்
எண்ணத்தில் உதிக்கும் அலைகள்
அதைத்தான் எழுதுகிறேன்''

- என்கிறார்.

துயரின் உச்சமாய்-

'எல்லாவற்றையும் பிரிந்து விட்டு என்னை
இங்கு வாட வைத்ததே என்விதி'

என்று தன்னையே முதலில் நொந்து கொள்ளும் அவர், பின் என்னமாய் மாற்றம் கொள்கின்றார்.

''மறுக்கப்படும் எம்மக்கள் வாழ்விற்காக ஆயுதம் தாங்கி போராட வேண்டிய'' நியதியை நிலை நிறுத்தும் அவர் ''எம்மிடையே வறியவர்க்கு மறுக்கப்படும் வாழ்வு கொடுக்கப்படவேண்டும்'' என்றஅடிப்படையிலேயே தனது தேடலைத்தொடங்குகிறார். ஆனால் அவரது இத்தேடல் என்பது திடீர் என்று வெளிநாட்டில் தொடங்கியதாக கருத முடியாது. இதற்கான விடை அவரது துணைவியாரின் முன்னுரையிலே இருக்கின்றது. எப்போதுமே வேகமாக இயங்கிகொண்டிருந்த போராளி ஒருவரின் ஆழ் மன நிலையை எவரால் அறிய முடியும்? அவருக்கு தொடக்கத்தில் இருந்தே ஆன்மீக ஈடுபாடு- எதிராளி மீதும் பரிதாபப்படும், அவர் தம் குடும்பங்களை நினைத்து வேதனைப்படும் இயல்பு- தெரியாதனவற்றை சிறுபிள்ளை போல எவரிடத் திருந்தும் கேட்டுத் தெரியும் சுபாவம் - மக்கள் நேயமே- அவரது தேடலின் தொடக்க நிலையாக இருந்திருக்க வேண்டும்.

தேடலின் அடிப்படை விதிகளை துணைவியார் விளக்கும் போது:-

''உலகில் எல்லார் கருத்தையும் கேள்.
சிந்தி. நன்றாக சிந்தி, நீயாகசிந்தி.
யாரும் உனக்காக சிந்திக்க மாட்டார்கள்''
என்றும்,
''அறிவும் வயதும் அனுபவமும் உயர்வும்
கிடைக்கும் போது பணிய வேண்டும்.
பணிவென்பது
உலகையும் மக்களையும் புரிந்து கொண்டு
அவர்களுக்காக உழைத்தல்''
-என்றவர்; அதை மேலும் விளக்குகையில்:-
''அறிவும் கல்வியும் கூடும் போது
மனிதன் கீழிறங்கி வரவேண்டும்''
- என்கிறார்.

பின், முத்தாய்ப்பாக தேடலின் இலக்கை விரிவாக்கும் போது ''ஒவ்வொரு மனித வாழ்வுக்கும் அர்த்தமிருக்கிறது. எம்முடைய வாழ்வின் அர்த்தத்தை நாம்தான் தேடிக்கொள்ள வேண்டும். தேடல் என்பது எம்முள் இருக்கும் அழுக்கை அகற்றுவது தான்'' என மிகஇலகுவாக புதியதாக விளக்கி நிற்கின்றார்.

இங்கேதான் கிட்டு உயர்ந்து நிற்கின்றார். உயிருட்டமுள்ள போராளியாக அவர் எழுதுவதும் ஆத்மீக ஞானத்தின் அழகைக் கூறும் துறவியாக அவர் மாறுவதும் இங்கே

தான் நிகழ்கிறது. அவர் இறுதியாக கூறுகிறார்:-

''பணக்காரனையும் ஏழையையும் சமமாக நடத்தப்பழகு. படித்தவனுக்கும் பாமரனுக்கும் சமமாக மதிப்புக் கொடு. மாற்றங்கள் மனதிலேற்பட வேண்டும். இது சோசலிசமுமல்ல; ஆத்மீகமுமல்ல. இதுதான் மனிதன் வாழ்வென்பது''

-இது அவரது துணைவியார்க்கூடாக எம்மவர் எல்லாருக்கும் சொல்லும் செய்தியல்லவா?

''வாழ்வு மறுக்கப்படும் வறியவற்கு... விறகு கொத்தும் கந்தனுக்கும், கள்ளு வடிக்கும் பூதனுக்கும். கோமணத்தோடு தோட்டம் கொத்தும் இராமையாவுக்கும், கண் வலைவீசும் கோபுவுக்கும் வாழ்க்கை வளம் பெற வேண்டும்... இதைத்தான் ஆத்மீகமும் சொல்கிறது. புரட்சியும் சொல்கிறது. ஆத்மீகம் போதிக்கிறது, புரட்சி வழிகாட்டுகின்றது. **''ஆத்மீகமும் புரட்சியும் வேறல்ல. இரண்டும் ஒன்றுதான்''**

இங்கே தான் தேடலின் சிகரத்தை கிட்டு தொட்டு விடுகிறார். காலம் காலமாக விளங்காப் பொருளாக நிற்கும் தத்துவ சிக்கலொன்றை முடிச்சவிழ்த்து விடுகின்றார். தனிமனித விடுதலைக்கும், அடிமைத்தளையை அறுக்கும் சக மானுடத்தின் விடுதலைக்கும் உள்ள முரண்பாட்டை நீக்கி விடுகின்றார். ஆன்மீகத்திற்கும், பொருண்மிய உலகிற்கும் இடையே பாதை அமைந்து விடுகின்றார். தேசவிடுதலைப் போராட்டத்தையும் பொதுவுடமைத்தத்துவத்தையும் இணைத்து விடுகின்றார். அகவிடுதலைக்கும், புறவிடுதலைக்கும் தொடர்பேற்படுத்திவிடுகின்றார். இவை எல்லாவற்றையும் விட தேடலை எவர்க்கும் இலேசாக்கி எவரும் தேட வேண்டிய அவசியத்தை மிக எளிதாக வலியுறுத்தி விடுகின்றார்.

ஏனென்றால், இவ்வுலகம் ஏற்கனவே தேடலைத்தொலைத்த உலகம், தேடுவோரை தடுமாறவைத்து தத்தளிக்கவிடும் உலகமல்லவா? இதனாலே

''தொடங்கியது சரிதான் நடுவிலெங்கோ
வழிதவறிப் போனேன்''

- என் போரும்,

''தேடலில் ஈடுபட்டே தேடியதை
தொலைத்தேன்''

-என் போரும் இங்குளர்.

''தேடாதே - தேடினால் தொலைந்து
போவாய்
இங்கே பாதைகள் மாற்றி வைக்கப்
பட்டுள்ளன''

எனப்பயமுறுத்தும் இவ்வுலகில் இப்படியொரு அற்புத மனநிலை எவ்வாறு கிட்டுவிற்கு வாய்த்தது? ஏறுங்கால் இறங்கவும், இறங்குங்கால் ஏறவும் அவரால் எவ்வாறு முடிந்தது? குருதியைக் குதறும் சோகங்களும் இழப்பின் அவலங்களும் வெற்றியின் பெருமிதமும் நிறைந்த போர்க்களத்தில் நின்ற போராளிக்கும் உயர்மன அமைதி கிட்டி.. முதிர்ந்து, கனிந்து. பழமாகி, பக்குவமாகி கசியும் கருணை உணர்வுகள் ஊற்றெடுக்கும் உள்ளம் எவ்வாறு கிட்டியது? துறவிகட்கும், ஞானிகட்கும் கிட்டாத ஞான ஒழுக்கமும் மன ஒருமைப்பாடும் இணைந்த நிலையை அவர் எவ்வாறு சென்றடைந்தார்?

இவை எல்லாவற்றையும் விட தனிமனித ஆளுமையை தாபனமொன்றின் இயங்கு விதிகட்குள்ளே நின்று வளர்க்க முடியும் என்பதை அவர் நிருபிக்கும்விதமே அலாதியல்லவா? விடுதலைப் போராட்டத்துள் புகவிரும்பாமல் தமது சுதந்திரம், ஆளுமையை மழுங்கடிக்க தாம் தயாராக இல்லையென பொய்காப்புக் காரணங்கள் பல கூறி விலகி நிற்கும் அறிவார்ந்தோருக்கு அவர்புகட்டும் பாடம் ஒரு வரலாற்று விதியாகி விடுகின்றது. எனவே ''காசி ஆனந்தன்'' எழுதியது போல ''நிறைவாகும் வரை மறைவாக இருந்த'' கிட்டு அவர்கள் போதித்த உண்மைகள் எமது போராட்டத்தின் புத்துயிர்ப்பு விதிகளாகும். எமது போராட்டம் இன்றைய உலகிற்கு அழிக்கப் போகும் புதிய தத்துவத்தின் தோற்றுவாயாகும்.

ஏனென்றால் ''வாடிய பயிரைக் கண்ட போது வாடியதோடு'' நின்று விடாது அதை வாடாமல் இருக்க வழி கண்டவர் பெயரே போராளி ஆகின்றது. எமது போராட்டத்தின் மறு பெயர் மனித நேயம் என்று ஆகி விடுகின்றது. தளைகள் அறுத்தல் என்பது ''நாமார்க்கும் குடியல்லோம்'' என அடிமைத் தளையை அறுப்பதாகி விடுகிறது. புற விடுதலை கிட்டாமல் அகவிடுதலை பற்றி எவராலும் சிந்திக்க முடியுமா என்ன?

இதனையே ''எமது சூரியன் ஒரு நாள் மலரும்'' என மனையாளுக்கு மடல் வரைந்த கிட்டு - ''செங்குருதித்துளி என் இதயச்சுவர் சுடர்கின்றவரை இங்கொரு விடுதலையை மலர்விக்க இறப்பிலும் வாழ்வேன் நான்'' என்ற வரிகளுக்குக் சாட்சியாகி விட்ட கிட்டு

''மறைந்தாய் மண்ணில் மடிந்தாய்''

-என்றும்,

''படிந்தாய் கண்ணில் நீர் முத்தாய்''

என தமிழீழ மக்கள் உதிர்க்கும் கண்ணீர்த் துளிகளிலே படிந்து விட்டான் அல்லவா?

இப்போது எவரும் -

''அறத்திற்கும் அன்பு சார்பென்பர்
-அறியார்
மறத்திற்கும் அஃதே துணை''

என்ற குறளை வாழ்விக்க மறைந்தவர் கிட்டு - உற்றுணர முடியுமல்லவா?

□□

மதிப்பீடு

## ஒஒ

## கலாநிதி சோ. கிருஷ்ணராசா

சிறுகதைத்தொகுதி

**'வெட்டுமுகம்'**

இணுவையூர்
சிதம்பர திருச் செந்திநாதன்

சிதம்பர திருச்செந்திநாதனின் ''வெட்டு முகம்'' என்ற சிறுகதைத் தொகுதி 'சவுத் ஏசியன் புக்ஸ்' நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது 1980 - 90 ஆண்டுக் காலப் பகுதியில் வெளிவந்த நூலாசிரியரின் சிறுகதைகளில் வருடத்திற்கொன்றாக 11 கதைகள் தெரிவு செய்யப்பட்டு கலாநிதி சுப்பிரமணியஐயரின் அணிந்துரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு எழுத்தாளர் என்ற முறையில் சிதம்பர திருச்செந்திநாதனின் 11 ஆண்டு கால வளர்ச்சியை வெளிக்காட்டுவனவாய் இத்தொகுப்பு அமைந்திருப்பது சிறப்பிற்குரியது.

ஈழத்துச் சிறுகதையாசிரியர்களிடையே இருவகையான கலைஞர்கள் உள்ளார்கள். ஒரு வகையினர் ''கதைபண்ணுவதில்'' தேர்ந்தவர்கள். மறுவகையினர் தம்மனுபவத்தை சிறுகதையாக வெளிப்படுத்துபவர்கள். சிறுகதை, நாவல் என்பனவற்றை தம்மனுபவ வெளிப்பாடாகக் கொள்ளும் இவ்விரண்டாவது பிரிவினரில் அடங்குபவரே சிதம்பர திருச்செந்திநாதன். கதைக்கான கருவைத் தேடிச் செல்லும் முதற்பிரிவினர் போலல்லாது, தன்வாழ்நிலையனுபவத்தில் கதைக்கான கருவைக் கண்டுகொள்ளும் இயல்பினராக சிதம்பரதிருச்செந்திநாதன் இருப்பதால் ''வெட்டுமுகம்'' சிறுகதைத் தொகுப்பில் போலித் தன்மை எதுவும் காணப்படவில்லை.

பத்திரிகைச் செய்திகளையும் வடிலாற்று துணுக்குகளையும் தமது ''செய்நேர்த்தித்' திறனால் சிறுகதை என்ற செய்பண்டமாகத் தருபவர்களின் ஆக்கங்களில் காணவே கிடைக்காத''உணர்வுத்தொற்றலை''வெட்டு முகம் சிறுகதைத் தொகுப்பிலுள்ள சில கதைகள் தருகின்றன. நல்ல கலைஞனுக் குரிய இக்குணாதிசயம் சிறப்பான கலை வெளிப்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாத தாகும். இப்பண்பை வெட்டுமுகத்தினூடாக சிதம்பரதிருச்செந்திநாதனில் காண முடி கிறது.

வெட்டுமுகத்தில் குறியீடு, படிமம், உரு வகம், தொடர்படிமம் என்ற எவ்வகைச் சிக் கலுமில்லாது வாழ்நிலையனுபவங்கள் நேர டியாகவே சொல்லப்பட்டிருக்கின்றன. சகல தரத்து வாசகர்களையும் மனதிற்கொண்டு இலகுவானதும் விரைவானதுமான வாசிப் பிற் கேற்றவிதமாக வெட்டுமுகத்தின் சிறு கதைகள் காணப்படுகின்றன. வாசகனைச் சிரமப்படுத்தா எளிமையான நடை இத் தொகுதிக்குச் சிறப்பைத் தருகின்றது. எளிமை சமூக நோக்குமுடைய எழுத்தாளர் களின் இன்றியமையாப் பண்பாயிருத்தல் வேண்டும். இத்தகைய கலைஞர்கள் தாம் கண்ட, கேட்ட, புரிந்து கொண்ட அனுபவங் களை கலைப்படைப்பாக உருவாக்கி சுவை ஞர்களிற்குத் தருகின்றனர். கருத்துப் பரி மாற்றம் இலகுவில் நடந்தேறுகிறது.

கலைஞன் சமகாலபிரச்சனைகளிலிருந்து பிரிந்து தன் படைப்புக்களை ஆக்கமுடியா தென்றும், தன் கதைகளின் கருவாக சம கால நிகழ்ச்சிகளே வருகின்றனவென்றும் நூலின் முன்னுரையில் குறிப்பிடும் நூலாசி ரியரின் சிறுகதைக்கருக்கள் அவரது பிரகட னத்திற்கேற்பவே அமைந்துள்ளன. 'கோஷ மும் வேஷமும், ஆரோகணம் அவரோகணம்' 'முகமூடி மனிதர்கள்,' 'குட்டையும் மட்டை யும்,' 'காணிக்கு வேலி உண்டு' ஆகிய கதை களில் சமூகக் குறைபாடுகளைக் கண்டிக்கும் ஆவேசமுள்ள கலைஞனைச் சந்திக்கிறோம். விடுதலைப் போராட்ட காலத்தில் தனிமனி தருக்கேற்படும் துன்பங்களை வருணிப்பவ னவாக 'வீட்டை மட்டுமல்ல,' 'என்றுமடியும் எங்கள்...' என்ற இருகதைகளும் காணப் படுகின்றன. 'வெட்டுமுகம்,' 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும்' என்ற சிறுகதைகள் கழிந்துபோன நினைவுகளைத் துயரத்துடன் மீட்கும் கருக்களைக் கொண் டனவாகவும், தனியொரு நிகழ்ச்சியைச் சுற் றியெழும் உணர்வுகளை வெளியிடுவதாக மண்வாசனை என்ற சிறுகதையும் காணப் படுகின்றன.

கதைசொல்லும் உத்தியைப் பொறுத்த வரையில் இருவேறு களங்களில் நிகழ்வதை அடுத்தடுத்து, மாறி மாறிக், காட்டும் உத்தி யுடனே பெரும்பாலான கதைகள் அமைந் துள்ளன. உத்திமுறை என்ற வரையில் இது மிகவும் இலகுவான வடிவமைப்பைக் கொண் டது. கோஷமும் வேஷமும், ஆரோகணம் அவரோகணம், முகமூடி மனிதர், குட்டை யும் மட்டையும், சேர்ந்தோம் வாழ்ந்தோம், காணிக்கு வேலியுண்டு என்ற சிறுகதைகளில் இவ்வுத்தி கையாளப்பட்டுள்ளன.

பல்வேறு சம்பவங்களைக் கூறி அச்சம்ப வங்கள் கதாபாத்திரங்களில் தோற்றுவிக்கும் உணர்வலைகளை கூறுவதாயமையும் உத்தி யில் எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும், வீட்டை மட்டுமல்ல, வெட்டு முகம், என்றுமடியும் எங்கள்... என்ற 4 சிறு கதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இருவேறு களங்களில் நிகழ்வதை மாறி மாறிக் காட்டி இறுதியில் இரண்டையும் ஒன்றாக இணைக் கும் உத்தியிலும் பார்க்க சிறப்பான சிறு கதை உத்தியாக இவ்விரண்டாவது வகை உத்தி காணப்படுகிறது. ஒரு சம்பவத்தைச் சுற்றிய கதாபாத்திரத்தின் உணர்வலை வர் ணிப்பாக மண்வாசனை என்ற சிறுகதையின் உத்தி காணப்படுகிறது. வெட்டுமுகம் சிறு கதைத்தொகுதியில் வருகிற சிறுகதைகள் அனைத்திலும் உத்திமுறையால் சிறந்த சிறு கதையாக மண்வாசனை காணப்படுகிறது. இதுவே இந்நூலின் இறுதிக்கதையுமாகும்.

தொகுத்துப்பார்க்கும் பொழுது இச்சிறு கதைத் தொகுதியில் உள்ளடங்கியவை சிதம் பரதிருச்செந்திநாதனின் கலையாக்க வளர்ச் சியை எடுத்துக் காட்டும் சிறப்பான வகை மாதிரித் தேர்வாக விளங்குகின்றனவென்ற முடிவிற்கு வரலாம். எதிர்காலத்தில் மேலும் சிறந்த படைப்புகளைத் தருவாரென்ற நம் பிக்கையை வெட்டுமுகம் சிறுகதைத் தொகுதி தருகிறது. □□



# மனிதனும் வரலாறும்

- பிரம்மஞானி -

**ஹேகலின் இயங்கியல் தத்துவம் என்ன சொல்கிறது? அதன் அடிப்படை விதிகள் என்ன? இந்த இயங்கியல் தத்துவத்தின் அடிப்படையில், உலகத்திற்கும் மனித வரலாற்றிற்கும் அவர் எவ்வித விளக்கத்தை அளிக்கிறார்? இந்த இயங்கியல் தத்துவத்தை மார்க்சீயம் எந்த வகையில் உள் வாங்கிக் கொண்டது?**

**இந்தக் கேள்விகளுக்கு இக்கட்டுரையில் தெளிவான விளககத்தை முனவைக்கிறார் பிரம்மஞானி.**

## 2

ஹேகல் படைத்த கருத்துலகின் மையக்கருத்தாக விளங்குவது இயங்கியல். இந்த இயங்கியல் தத்துவத்தின் (*PHILOSOPHY OF DIALECTICS*) அடிப்படையிலேயே மனவுலகத்தையும் பொருளுலகத்தையும் அவர் விளக்க முனைந்தார். மனித நாகரீகத்திற்கும் உலக வரலாற்றிற்கும் வியாக்கியானம் அளித்தார். பிரபஞ்ச இயக்கத்தின் சூத்திரத்தையும் விபரிக்க விழைந்தார்.

ஹேகலின் இயங்கியல் தத்துவத்தை மார்க்சீய வரலாற்றியல் எவ்வாறு, எந்த வடிவத்தில் உள்வாங்கிக் கொண்டது என்பதை ஆராய்வதற்கு முன்னர், இந்தத் தத்துவம் என்ன சொல்கிறது என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

இந்த உலகம் நிலையானது அல்ல. இந்த உலகத்தில் எதுவுமே நிரந்தரமானது அல்ல. எதுவுமே நிச்சயமானதும் அல்ல. இந்த உலகம் சதா மாறிக்கொண்டிருக்கிறது. சதா அசைந்து கொண்டிருக்கிறது. சதா அவிழ்ந்து கொண்டிருக்கிறது.

அக உலகம் என்றாலும் சரி, புற உலகம் என்றாலும் சரி, எதிலும் எல்லாவற்றிலும் ஒரு பெயர்வு இருக்கிறது; ஒரு நகர்வு இருக்கிறது; ஒரு மலர்வு இருக்கிறது. அணுவிலிருந்து அண்டம் வரை எல்லாமே ஒரு இயக்கு சக்தியால் இயக்கப்படுகிறது.

காலம் என்பதும் இயக்கம்; வாழ்வு என்பதும் இயக்கம்; இருப்பு என்பதும் இயக்கம்; வரலாறு என்பதும் இயக்கம்.

இந்த இயக்கம், இலக்கின்றி சும்மா இயங்கவில்லை. இந்த இயக்கத்தின் இயக்கத்தில் ஒரு நிலை மாற்றம் நிகழ்கிறது; ஒரு புத்தாக்கம் பிறக்கிறது; ஒரு வளர்ச்சி தோன்றுகிறது, ஒரு முன்னேற்றம் ஏற்படுகிறது. இந்த இயக்கம் எல்லாவற்றையுமே ஒரு வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கி நகர்த்திச் செல்கிறது. உயர்நிலைக்கு இட்டுச் செல்கிறது.

மனித சிந்தனையிலும் இந்த இயக்கம் இருக்கிறது. மனித சமூகத்திலும் இந்த இயக்கம் இருக்கிறது. மனித வரலாற்றிலும் இந்த இயக்கம் இருக்கிறது. இயற்கையிலும் இந்த இயக்கம் இருக்கிறது. முழு உலகமுமே இந்தச் செயலியக்கப் படிமுறையில் தோற்றம் கொண்டு, வளர்ச்சிகண்டு, மாற்றமடைந்து,

முன்னோக்கிய முனைப்பில் உண்டாகிச் செல்கிறது.

மனித மனம், சமூகம், இயற்கை என்ற ரீதியில் சகலவற்றையும் வளர்ச்சிப் படிமுறையில் நகர்த்திச் செல்லும் செயலியக்கத்திற்கு அடிப்படையான விதிகள் உள்ளன. இந்த இயங்கு விதிகள் பற்றிய தத்துவக் கோட்பாடே இயங்கியல் எனப்படும். இந்த இயங்கியல் விதிகளை (LAWS OF DIALECTICS) முதன் முதலாக நெறிப்படுத்திய பெருமை ஹேகலைச்சாரும்.

இந்த இயங்கியல் விதிகளில் அடிப்படையானது முரணியமாகும் (CONTRA DICTION).

எந்தப் பொருளுக்கும் ஒரு தன்னியக்கம் இருக்கிறது. உள்ளீட்டான சுய-இயக்கம் இருக்கிறது. இந்தச் சுய- இயக்கம் முரணிய தன்மையைக் கொண்டது. அதாவது ஒன்றுக்கொன்று மாறான, முரணான எதிர்வுத் தன்மைகளைக் (OPPOSITE TENDCIES) கொண்டது. ஒரு பொருளில் இந்த எதிர்வுத் தன்மைகள் ஒன்றித்திருக்கும் நிலையை, எதிர்வுகளின் ஒன்றியம் (UNITY OF THE OPPOSITES) என்கிறார் ஹேகல். இந்த எதிர்வு சக்திகள் ஒன்றித்திருந்து, அதே சமயம் ஒன்றோடு ஒன்று முரண்பட்டு நிகழ்த்தும் பிணக்காக, போராட்டமாக அந்தப் பொருளின் வாழ்வியக்கம் அசைகிறது. இந்த முரண்பாடு முற்றி வெடிக்கும் பொழுது மாற்றம் நிகழ்கிறது. புதியது பிறக்கிறது. எனவே, எந்த ஒரு பொருளது இயக்கத்திற்கும், மாற்றத்திற்கும், புத்தாக்கத்திற்கும், புதிய வளர்ச்சிப் போக்கிற்கும் அந்தப் பொருளில் உள்ளீட்டாக, அதன் உள்ளியக்கமாகச் செயல்படும் முரணியமே காரணியாக இருக்கிறது. சிந்தனை உலகிலும் சரி, சமூக உலகிலும் சரி, இயற்கையின் சகல பொருட்களிலும் சரி, தோற்றம் மாற்றம் முன்னேற்றம் என்பன புற சக்திகளால் தூண்டப்படுவதல்ல. அது உள்ளீட்டாக, உள் - முரண்பாட்டின் உந்துதலால் நிகழ்கிறது.

இயங்கியலின் அடிப்படையிலேயே மனித மனம் படிநிலை வளர்ச்சி காண்கிறது என்கிறார் ஹேகல். இங்கும் முரணிய விதி முக்கிய இடம் பெறுகிறது. முரண்பாடான சிந்தனைகள் தோன்றி அவற்றின் தீர்வாக புதிய சிந்தனை பிறக்கிறது. காலப்போக்கில் அந்தப் புதிய சிந்தனையிலும் முரண்பாடு எழுந்து, அது களையப்பெறும்போது மேலும் செழுமைபெற்ற சிந்தனை வளர்கிறது. இவ்விதம் ஒரு முடிவில்லா முரணியச் சுழற்சியில் மனித மனமானது பரிணாம வளர்ச்சிகண்டு அகற்சி பெறுகிறது. மனித அறிவு முன்னேற்றம் காண்கிறது.

தர்க்கீகம்பற்றி ஹேகல் இரு நூல்களை எழுதியிருக்கிறார். இந்நூல்களில் அவரது இயங்கியல் தர்க்கீகம் (DIALECTICAL LOGIC) விபரிக்கப்படுகிறது. முரணியம் மூலம் எண்ண இயக்கத்தின் முன்னோக்கிய நகர்வு தர்க்க ரீதியில் விளக்கப்படுகிறது. அதன் சாராம்சம் இதுதான்.

முதலில் ஒரு எண்ணம் அல்லது சிந்தனை பிறக்கிறது. இது கருத்தாக்கம் (THESIS) எனப்படும். இந்தக் கருத்துக்கு மாறாக ஒரு எதிர்க் கருத்து எழுகிறது இது முரண் கருத்தாக்கம் (ANTI- THESIS) எனப்படும். ஒன்றுக்கு ஒன்று மாறான இவ்விரு கருத்துக்கள் மத்தியில் முரண்பாடு தோன்றுகிறது. இறுதியில், இம்முரணான கருத்துகள் மத்தியில் ஒத்திசைவு ஏற்பட்டு, அதன் தீர்வாக ஒரு புதிய கருத்து பிறக்கிறது. இது கூட்டுக் கருத்தாக்கம் (SYNTHESIS) எனப்படும். இந்தக் கூட்டுக் கருத்தாக்கம், காலகெதியில் மீண்டும் ஒரு கருத்தாக்கமாக முரண்பாட்டைச் சந்திக்கிறது. இவ்விதம், எண்ண இயக்கமானது இயங்கியலின் மும்முனைச் சுழற்சியில் முன்னேறிச் செல்கிறது.

ஹேகலின் இயங்கியல் தர்க்கீகத்தில் மனித சிந்தனையை உயர்நிலைக்கு இட்டுச் செல்லும் உந்துசக்தியாக முரணியமே செயற்படுகிறது. முரணியத்தால் நிகழும் மாற்றத்தை விளக்கும் வகையில் மேலும் சில இயங்கியல் விதிகளை அறிமுகப்படுத்துகிறார் ஹேகல். இவற்றில் எதிர்மறை (NEGATION), எதிர்மறையின் எதிர்மறை(NEGATION OF THE NEGATION) என்பன முக்

கிய விதிகளாகும். எதிர்மறை என்பது ஒரு கருத்தாக்கத்தின் அல்லது ஒரு பொருளின், அல்லது ஒரு கட்டமைப்பின் நிலைமாற்றத்தை குறிப்பிடுகிறது. அதாவது ஒன்று செயலிழந்து, நிலைமாறி, அதன் சிதைவால் இன்னொன்றின் வளர்ச்சிக்கு ஏதுவாகும் மாற்றீட்டை இது பொருள்படுத்தும்.

உதாரணமாக, ஒரு கருத்துக்கு எதிராக முரண்பாடான இன்னொரு கருத்துத் தோன்றி, முன்னதை வாழாண்மை ஆக்குவதை எதிர்மறை என்கிறார் ஹேகல். பின்னர், முரணிய கருத்துக்கள் இரண்டுமே மாற்றமடைந்து புதிய கருத்தாக்கம் பிறக்கிறது. இவ்விதம் முரணிய கருத்துக்கள் செயலிழந்து செல்லுபடி அற்றுப்போவதை 'எதிர்மறையின் எதிர்மறை' என விளக்குகிறார் அவர். எதிர்மறையிலும் சரி, அல்லது எதிர்மறையின் எதிர்மறையிலும் சரி, ஒரு கருத்தாக்கம் அல்லது ஒரு பொருள் முற்றுமுழுதாக அழிக்கப்படுவதல்ல. இந்த மாற்றீட்டில், அவற்றிலுள்ள சாராம்சப் பண்புகள் உள்வாங்கப்பட்டு உயர்நிலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. உதாரணமாக, ஒரு விதை முளைவிட்டு துளிர்த்து அதன் சிதைவிலிருந்து ஒரு மரம் வளர்கிறது. அந்த விதையின் சிதைவை எதிர்மறை என்றும், அந்த மரத்திலிருந்து மீண்டும் உற்பத்தியாகும் புதிய விதைகளை எதிர்மறையின் எதிர்மறை என்றும் அவர் விளக்கம் கொடுக்கிறார். விதையானது சிதைவுற்றபோதும் அதிலுள்ள சாராம்சப் பண்புகள் மரமாகி, மீண்டும் விதையாகி தொடர்ச்சியான ஒரு வளர்ச்சிப் போக்கில் கட்டவிழ்ந்து செல்கிறது.

ஹேகலின் இயங்கியல் தர்க்கீகம் மிகவும் சிக்கலானது. கனமானது. கருத்துப் புதிர்கள் நிறைந்தது. தனது இயங்கியல் கோட்பாட்டை நிறுவ மிகவும் பூடகமான வாதங்களை அவர் முன்வைக்கிறார். ஒரு உதாரணத்தை மட்டும் இங்கு பார்ப்போம்.

**கருத்தாக்கம்:** முழுமையானது பண்புகள் எதுவுமற்ற தூய்மையாக இருக்கிறது.

**முரண் கருத்தாக்கம்:** பண்புகள் எதுவுமற்ற தூய்மையானது, சூன்யமாக இருக்குமாதலால், முழுமை என்பது இருக்கவே முடியாது.

**கூட்டுக் கருத்தாக்கம்:** முழுமை என்பது நிலையான பண்புகள் எதுவுமற்றதாக சதா கட்டவிழ்ந்தவாறு உண்டாகிக் கொண்டிருக்கிறது.

இந்தத் தர்க்கீகத்தில், இருத்தல் (*BEING*) இல்லாமை (*NON-BEING*) என்ற முரணிய கருத்துக்கள், உண்டாகுதல் (*BECOMING*) என்ற கூட்டுக் கருத்தாக்கத்தில் தீர்வுகாணப்பட்டு செழுமை பெறுகிறது என்பது ஹேகலின் வாதம். இவ்வாறு, வாதப் பிரதிவாதங்களை அடுக்கிச்சென்று மிகவும் பூடகமான தர்க்கீக உலகத்தைப் படைக்கிறார் அவர்.

ஹேகலின் இயங்கியல் மனவுலகத்திற்கே முதன்மை கொடுக்கிறது. அவரது தரிசனத்தில் சகலதுமே மனவுலகில் தொடங்குகிறது.

அகத்தின் இயல்புகள்தான் புறத்திலும் இருக்கிறது. மனவுலகத்து இயங்கியல் தான் பொருளுலகத்தையும் இயக்குகிறது. எல்லாமே ஒரே விதியில் அசைகிறது. அகம்வேறு புறம்வேறு அல்ல. அகமே புறம். மனமே இந்த உலகம். மனமே எல்லாவற்றிற்கும் மூலமாக இருக்கிறது. மனதின் இயக்கமாக, அதன் பொருளிய வெளிப்பாடாக மெய்யுலகம் தோற்றப்பாடு கொள்கிறது. இந்த மனமானது மனிதனின் மண்டை ஓட்டிற்குள் மட்டும் செயற்படவில்லை. அதன் பரப்பு எல்லையற்றது. அது அண்டம்வரை விசாலித்து நிற்கிறது. பிரபஞ்ச மனமாக எங்கும் வியாபித்து நிற்கிறது. ஆன்மாவாக, பரமான்மாவாக, பிரம்மமாக எல்லாவற்றையும் ஆட்கொண்டு நிற்கிறது.

இயங்கியலின் சக்கரத்தில், அதன் முரணியச்சுழற்சியில் பிரபஞ்ச மனமானது பிரபஞ்சத்தை இயக்கிச் செல்கிறது. தோற்றமும் மாற்றமுமாக சகலதையும் படைத்து, சகலதையும் காத்து, சகலதையும் அழித்து, அந்தச் சிதைவில் சகலதின் உள்ளியல்புகளையும் உள்வாங்கி, உயர்நிலைப் பரிமாண வளர்ச்சி

யில் பரிபூரணத்துவம் என்ற இலட்சியப் பயணத்தைத் தொடர்கிறது.

பிரபஞ்ச மனமானது பூமியிலும் ஒரு இயங்கியல் காவியத்தை எழுதுகிறது. அது தான் உலக வரலாறு. மனித வரலாறு. பிரபஞ்சப் பிரக்ஞையின் கணங்களாக, எண்ணப் பொறிகளாக இங்கு யுகங்கள் தோன்றுகின்றன. ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு நாகரீகம் தோன்றி மறைகிறது. இந்திய, சீன, கிரேக்க, ரோம, கிறீஸ்தவ நாகரீகங்கள் என்று. இந்த நாகரீகங்கள் ஒவ்வொன்றிலும், அந்த யுகத்து சமூக, அரசியல், பொருண்மிய, கருத்திய கட்டமைப்புகள் அனைத்துமே பிரபஞ்ச மனதில் உதித்த எண்ணப் பொறியின் வெளிப்பாடாகத் தோற்றப்பாடு கொள்கிறது. அந்த எண்ணமானது அந்த நாகரீகத்தில் அதியுன்னத வளர்ச்சியைப் பெறுகிறது. (உதாரணமாக, ரோமநாகரீகத்தில்சட்ட ஆட்சி என்ற எண்ணப்பாடு உன்னத நிலையை அடைந்ததாகக் கூறுகிறார் ஹேகல்) ஒவ்வொரு நாகரீகத்தின் சிதைவிலும், அதன் எதிர்மறை மாற்றீட்டாக, அந்த நாகரீகத்தின் சாராம்சப் பண்பான அந்த எண்ணம் உள்வாங்கப்பட்டு, அடுத்த யுகத்திற்கு, அடுத்த நாகரீகத்திற்கு, அடுத்த வரலாற்றுக் கால கட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த வரலாற்று ஓட்டத்தில் பிரபஞ்சப் பிரக்ஞையானது மானிடத்தின் கூட்டு மனதாக தோற்றப்பாடு கொண்டு புதிது புதிதாக விழிப்புநிலை பெற்று வளர்கிறது. முரண்பாடுகளைக் களைந்து, தளைகளை அகற்றி, விடிவை நோக்கி, முழுமையை நோக்கி முன்னேறிச் செல்கிறது.

**"காலம் என்பதும் இயக்கம்; வாழ்வு என்பதும் இயக்கம், இருப்பு என்பதும் இயக்கம்; வரலாறு என்பதும் இயக்கம்.**

**இந்த இயக்கம், இலக்கின்றி சும்மா இயங்கவில்லை. இந்த இயக்கத்தின் இயக்கத்தில் ஒரு நிலை மாற்றம் நிகழ்கிறது; ஒரு புத்தாக்கம் பிறக்கிறது; ஒரு வளர்ச்சி தோன்றுகிறது; ஒரு முன்னேற்றம் ஏற்படுகின்றது. இந்த இயக்கம் எல்லாவற்றையுமே ஒருவளர்ச்சிப் பாதையில் முன்னோக்கி நகர்த்திச் செல்கிறது. உயர் நிலைக்கு இட்டுச் செல்கிறது"**

இவ்வாறு பிரபஞ்சமனம் இயங்கியல் சக்கரத்தில் சுழன்று, மனித வரலாற்றை நகர்த்துகிறது.

ஹேகலின் தத்துவார்த்த எழுத்துகளை ஆன்மீகவாதம் என்றும், புதிரான புராணக்கதை என்றும் கடுமையாக விமர்சித்த கார்ல் மாக்ஸ் அவரது இயங்கியல் கோட்பாட்டை மெச்சத் தவறவில்லை. 'இயக்கத்தின் இரகசியத்தை முதன் முதலாக ஆழமாக விளக்கிய பெருமை ஹேகலைச் சாரும்' எனப்பாராட்டினார். எனினும், ஹேகலின் இயங்கியல் இறையியலில் புதைந்து கிடக்கிறது; பிரபஞ்சம் எங்கும் வியாபித்து நிற்கிறது; ஆகாயத்தில் தலை கீழாகத் தொங்கும் அதனை, பூமிக்கு கொண்டு வந்து நிலத்தில் காலூன்றச் செய்ய வேண்டும், எனக் குறிப்பிட்டார் மாக்ஸ். ஹேகலின் இயங்கியல் எண்ண விதை பூடகமாக ஆன்மீக மேலுறையால் போர்த்தப் பட்டிருக்கிறது. இந்த மேலுறையை கழற்றி எறிந்து விட்டு விதையை மட்டும் எடுக்க வேண்டும், என்று இன்னொரு இடத்தில் கூறுகிறார்.

ஹேகலின் கருத்துலகிலிருந்து இயங்கியலைப் பிரித்தெடுக்கும் அறுவைச் சிகிச்சையை மார்க்சியம் நுட்பமாகச் செய்திருக்கிறது. இந்த அறுவைச் சிகிச்சை மூலம் பிரபஞ்ச யாத்திரையில் சென்ற இயங்கியல் பூமிக்கு கொண்டு வரப்படுகிறது. சமூக எதார்த்த நிலத்தில் நிறுத்தப்படுகிறது.

ஹேகலின் ஆன்மீகத்தை மார்க்சியம் விரட்டியது. ஆயினும் ஹேகலின் 'ஆவியை' மார்க்சியத்தால் விரட்ட முடியவில்லை. அது

மறைபொருளாக, எதிர்மறையின் சாகாத பண்பாக மார்க்சீயத்தில் புரையோடிக்கிடக்கிறது.

மார்க்சீயத்தின் பிதாமுகர்களான மாக்ஸ், ஏங்கல்ஸ் தொடக்கம், மார்க்சீயப் புரட்சிவாதிகளான லெனின் மாவோ, மற்றும் பல நவ-மார்க்சீய தத்துவ அறிஞர்கள் வரை ஹேகலின் இயங்கியல் தத்துவம் பலரால் பல்வேறு ரகங்களில், பல்வேறு வடிவங்களில் உள்வாங்கப்பட்டிருக்கிறது.

மாக்ஸின் தோழரான ஏங்கல்ஸ் இயங்கியல் தத்துவத்தின் அடிப்படையில் இயற்கையின் இரகசியங்களை விளக்க முனைந்தார். இயற்கையின் இயங்கியல் (*DIALECTICS OF NATURE*) என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல் இயங்கியல் விதிகளை விஞ்ஞான விதிகளாக நிறுவ முனைகிறது. உயிருலகமும் பெளதீக உலகமும் இயங்கியலால் இயக்கப்படுவதாக அவர் தரும் பல உதாரணங்களை இன்றைய விஞ்ஞானம் ஏற்க மறுக்கிறது. அன்றைய கால கட்டத்தில், அவர் இயங்கியலின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தி எழுதினார் என்பதை இன்று பலர் ஒப்புக்கொள்கிறார்கள்.

இயங்கியலின் அடிப்படையில் ஆன்மத்தின் சூட்சுமத்தை விளக்க முனைந்தார் ஹேகல். அதே இயங்கியல் விதிகளைக் கொண்டு இயற்கையின் இரகசியங்களை விளக்க முனைந்தார் ஏங்கல்ஸ். அதே விதிகளைக் கொண்டு சமூக வரலாற்று இயக்கத்தை விளக்க முனைந்தார் மாக்ஸ்.

ஹேகலின் இயங்கியலுக்கும், மார்க்சீய இயங்கியலுக்கும் மத்தியில் அடிப்படையான வேறுபாடு உண்டு என வாதிப்பவர்களும் உளர். ஹேகலின் இயங்கியல் கருத்து நிலை சார்ந்தது; அகவயமானது; அது நிஜவுலகத்தின் நிழலான மனவுலகத்தை ஆராய்கிறது. ஆனால் மார்க்சீய இயங்கியல் பொருளியம் சார்ந்தது; நிஜவுலகத்தின் மெய்யுண்மைகளை விளக்க முயல்கிறது, என்பது இவர்களது வாதம். இவ்விதம் மார்க்சீய இயங்கியலை வேறுபடுத்தி, அதனை பொருளிய இயங்கியல் (*MATERIALISTIC DIALECTICS*) என இவர்கள் வர்ணிக்கிறார்கள். இந்தவேறுபாட்டில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆயினும் இந்த வேறுபாடு ஆய்வுப்பொருள் சார்ந்தது; ஆய்வுமுறைமை சார்ந்தது. ஆனால், இயங்கியலின் மூல விதிகளில் அடிப்படையான மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இந்த மூல விதிகளை நெறித்தவர் ஹேகல். இது அபாரமான கண்டுபிடிப்பு என மார்க்சீயத்தின் தந்தைகளே மெச்சியிருக்கிறார்கள். இந்த மூல விதிகளை மார்க்சீயம் உள்வாங்கி, அதன் அடிப்படையில் ஆழமான சமூக ஆய்வுகளையும், நடைமுறைப் பரிசோதனைகளையும் செய்திருக்கிறது. இன்னொரு விதத்தில் சொல்லப்போனால், ஹேகலின் இயங்கியல் விதிகளை மார்க்சீயம் உள்வாங்கி, அவற்றை சீரமைத்து, செழுமைப்படுத்தி, சிறப்பான ஆய்வுக்கருவியாக கையாண்டிருக்கிறது எனலாம்.

(தொடரும்)



'வெளிச்சம்'
கலை, இலக்கிய சமூக இதழ்

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

அட்டைப்பட ஓவியம்:
செங்மலையான்

அச்சு:
ம. மரியதாஸ்

வெளியீடு:
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

தெல்லிப்பழை கலை இலக்கிய களம் 'கோலங்கள் ஐந்து'. என்னும் நாடகத்தொகுதியை வெளியிட்டுள்ளது. நாடகங்கள் ஐந்தும் வெவ்வேறு கருப்பொருளைக் கொண்டவை; வெவ்வேறு காலப்பின்னணியுடையவை. ஆனால் நடிப்பதற்கென்றே இவை எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. தயாரிப்புக் குறிப்புகள் தாராளமாகத் தரப்பட்டுள்ளன. அநுவை நாகராஜனின் 'சபதம்' இதிகாசக்கதை. இருகாட்சிகளில் நான்கு பாத்திரங்கள் நடத்திச் செல்லும் உபகதை. பால்ய நட்பின் அருமையை மறந்த துருபதனுக்கு, துரோணார் அதை உணர்த்திய கதை. குருபக்தியின் உயர்வைக்கூறும் கதை.

மயிலங்கூடலூர் சி. அப்புத்துரை எழுதிய ''நாகாக்க'' இலக்கியச் செய்திகளைக் கொண்டு புனையப்பட்ட ஓரங்க நாடகம். இந்தச் செய்திகள் விநோத ரசமஞ்சரியில் காணப்படும் கர்ணபரம்பரைச் செய்திகள். உதிரியாக நிற்கும் இக்கதைகளை நிகழ் காலச்சம்பவம் ஒன்றினூடாக சமத்காரமாக இணைத்திருப்பது ஆசிரியருடைய திறமை.

சந்தான குரவருள் முதல்வராகிய மெய்கண்டார் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது சைவப்புலவர் சு. செல்லத்துரை எழுதிய 'மெய்காணலும் மெய்யுணர்தலும்'' நல்ல தமிழ் நடை, பொருத்தமான திருவாசகப்பாக்கள் ஆங்காங்கு சேர்க்கப்பட்டுள்ளன.

நாடகத்திற்கு இன்றியமையாத அம்சம் முரண். பிரச்சினை சிக்கலாவதும் ஈற்றில் அந்தச்சிக்கலுக்கு ஒரு தீர்வு ஏற்படுவதும் வழமை. நாடகம் இப்படி நகரும் பொழுதே பாத்திரங்களுடைய இயல்புகள் வெளிப்படும். மொத்தத்தில் நாடகம் வாழ்க்கை பற்றிய நமது நோக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். நமக்குள் ஒரு ''வெளிச்சப்பாடு'' தோன்ற வேண்டும். இந்த அளவு கோல் கொண்டு பார்த்தால் மேற்குறிப்பிட்ட நாடகங்கள் முழுமை பெறவில்லை. என்பது புலனாகும். ''சபதத்தைச்'' சற்று விரிவுபடுத்தியிருந்தால். அந்த முழுமை வாய்த்திருக்கும்.

''வாழை மரம்'' கலைப் பேராசு ஏ. ரி. பொன்னுத்துரையின் படைப்பு பயன்தரும் பழமரங்களை அழிக்கக் கூடாது என்ற செய்தி கலாபூர்வமாகச் சொல்லப் படுகிறது.

நாடகக் கவிராயர் பீதாம்பரத்தை வாழை மரம் உபசரிக்கிறது. இரண்டு கனிகளை உண்டு சோர்வு நீங்கப் பெறுகிறார். அவர். நன்றி கூறுகிறார். இதுவரை சோமசுந்தரப்புலவருடைய ''வாழையும் புலவனும்'' கதை. அப்பால், திருவிழாவிற்கு வாழை மரம் வெட்டி அலங்காரம் செய்வதற்கு சில மாணவர்கள் வருகிறார்கள் பீதாம்பரம் அவர்களைத் தடுக்கிறார்; புத்தி சொல்கிறார். ''குட்டிகளை வெட்டாமல் பழுத்த குலை வாழைகளை வெட்டினால் அலங்காரம் அற்புதமாய் இருக்கும். விழா முடிய குலைகளையும் விற்கலாம்'' -இது பீதாம்பரத்தின் கருத்து. சின்னக்குட்டிகளை

● மறுபீடு ●

# கோலங்கள் ஐந்து

## — ஒரு பார்வை

ஒ

ஒ

**சோ. பத்மநாதன்**

வேரோடு கிளப்பினால், திரும்பவும் பக்குவமாக நட்டு வளர்க்கலாம்; பயன் பெறலாம் என்பதையும் மாணவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

பெரிய கதை இல்லைத்தான். ஆனால் தமது நாடக உலக அனுபவத்தை நன்கு பயன்படுத்தியிருக்கிறார், ஏ. ரி. பொ. வசந்தன் மெட்டு, கப்பல் பாட்டுக்கோலம் முதலிய நாட்டார் இயற்கோலங்கள் நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

''குருவி கூவ மறந்ததோ'' கோகிலா மகேந்திரனுடைய நாடகம். இரண்டாவது ஈழப் போர் தொடங்கிய பின் பல்லாயிரம் தமிழ் மக்கள் அகதிகளாக இருக்கின்றனர். முகாம்களிலன்றி, பிறர் வீடுகளில் வசதிகளைப் பகிர்ந்து கொண்டிருப்பவர் ஒரு வகை. இவர்கள் அனுபவிக்கும் மனக்கஸ்ரங்களுக்கு கலை வடிவம் தந்து கோகிலா முன்பு ஒரு சிறுகதை எழுதியிருக்கிறார்- ''முகாமுக்கு போகாத அகதி'' இந்த நாடகமும் அதே தொனிப் பொருள் கொண்டது

போட்டது போட்டபடி ஓடிவந்த மக்கள் முதலில் ஒரு கோயிலில் தங்குகிறார்கள் பிறகு வீடு தேடுகிறார்கள். வீட்டுச் சொந்தக்காரர்கள் இரங்குவதாய் இல்லை.

இடம் பெயர்ந்து வந்தவர்கள் தாம் தங்கியிருக்கும் இடத்தில் விளையாடப் போனாலும் வெல்ல ஏலாது (வெல்லக் கூடாது!)

அந்தியேட்டி வீட்டில் சாப்பிடப் போனாலும் புளிச்ச கறிசோறுதான் கிடைக்கிறது பாயாசம் கிடைக்கவில்லை அத்துடன் கேளாதகேள்வியள்

இந்த நிலையில்-

இந்த அலைச்சலுக் கெல்லாம் காரணம் என்ன என்று ஆராய்கிறார்கள் அகதிகள். ''அரசு சொந்த மண்ணை விட்டு எங்களைக் கலைச்சதுதான் காரணம்!'' என்ற ஞானோதயம் ஏற்படுகின்றது.

''செய்ய வேண்டியது என்ன?'' - இது அடுத்த கேள்வி.

''எங்கட மண்ணில் இருந்து எதிரியை விரட்டுவது!'' - இது பதில்.

லெப்ட் - றைற், லெப்ட் - றைற் ஓசை சூசகமாகப் போராட்டத்தைக் குறிப்பிடுவதோடு திரை விழுகிறது.

''கைத்தல நிறைகனி'' என்று தொடங்கிப் பிள்ளையார் கதை கூற வந்த கதாப் பிரசங்கியார் அகதிகளின் கதையைச் சொல்லி முடிப்பதாக அமைத்திருக்கிறார் நாடகாசிரியை.

சமகால யதார்த்தத்துக்குள் காலூன்றி நிற்கிறார் கோகிலா. பொருத்தமான பாடல்கள் ஆங்காங்கு சேர்க்கப்பட்டுள்ளன. நடிப்பதற் கென்றே எழுதப்பட்ட நல்ல நாடகம் என்ற திருப்தியை ''குருவி கூவமறந்ததோ'' தருகிறது.

இடம் பெயர்ந்த மக்கள் அனுபவிக்கும் உளவியல் ரீதியிலான பிரச்சனைகளை அணுகும் ஒரே படைப்பு என்ற வகையிலும், சாத்தியமானதொரு தீர்வை முன் வைப்பதிலும், இந்த நாடகம் சிறந்து நிற்கிறது.



சமூகப்புரட்சி என்பது கலாசார மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. சமூகப் புறநிலையில் மாற்றம் ஏற்படும் பொழுது அகநிலையில் மாற்றம் ஏற்படுவது அவசியமானது. பழைய முரண்பாடுகள் நிறைந்த, சமூக உறவுகளை உடைத்தெறிந்து, புதிய சமூக உறவுகளை கட்டி எழுப்பும் போது, இந்த சமூக மாற்றத்திற்கு ஏற்ப, மக்களின் மனவுலகிலும் ஒரு புரட்சி நிகழவேண்டும். புதிய சமுதாயத்தில் புதிய உறவுகளைக் கொண்ட ஒரு புதிய வாழ்க்கையைத் தழுவும் மக்கள் ஒரு புரட்சிகரமான உலகப் பார்வையைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இங்குதான் கலாசார மறுமலர்ச்சி முக்கியமானது.

—தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

அடிக்கின்ற கைதான் அணைக்கும் என்றது
அந்நியன் கைதனை அல்லடா
அறைகின்ற போது மறுகன்னம் காட்டென்றது
அடக்கு முறையாளனிற்கு அல்லடா
அடிக்கின்ற அடிக்கு பதிலடி என்றது
இதிகாசத்தின் வழி அல்லவா
அதர்மத்தை அழிக்க கொலையும் செய் என்பது
கீதையின் தொனியல்லவா
தர்மம் காக்க தலையைக் கொடுப்பதும்
தமிழன் பண்பல்லவா
தன்மானம் போயிடின் உயிரை விடுவது
தலைவன் அணியல்லவா
வடிக்கின்ற கண்ணீர்த் தாரையை விலக்கு
தமிழா அணிசேரு!
வெடிக்கின்ற எரிமலைப் பிழம்பாய் மாறு
எதிரிகள் இங்கேது?
குடிக்கொரு வீரர் புலிக்கொடி ஏந்து
விடிவிற்கு வழிதேடு
முடிக்குரியாளர் தமிழர்
அடிமை வாழ்விற்கு குழிதோண்டு.



# கீதையின் பாதையில் தர்ம தேருக்கு வடம்பிடிப்போம்

இ. திருமாறன்

● போராளியின் பேனாவிலிருந்து ●

- விவசாய கிருமி நாசினி வகைகள்
- இரசாயன உரவகைகள்
- நல்லினவிதை வகைகள்

எல்லாவற்றையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளுங்கள்.

# திருநாவுக்கரசு அன் சன்ஸ்

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

'இசையால் வசமாகா இதயமெது...?

நித்தியா ஸ்பொட் ஒலிப்பதிவுக் கலையகத்தில்

இசை ஊற்றெடுக்கிறது. ஒரு நதிபோல அதன் பிரவாகம் எங்கும் பரவுகிறது.

நீங்கள் விரும்பும் பழைய, புதிய பாடல்களையும், எழுச்சிப்பாடல் களையும் Compex (CD) யில் இருந்து பதிவு செய்பவர்கள்.
உங்களின் மனதுக்கின்பமான எந்தப் பாடல்களையும்
நவீன கருவிகள் மூலம் பதிவு செய்து கேட்டு மகிழுங்கள்

நித்தியா ஸ்பொட்
ஒலிப்பதிவுக் கலையகம்
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

# சஞ்சீவி

இராமநாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

- பெயின்ற்
- இறிற் பிளாஸ்ரர்
- கட்டிடப் பொருள்கள்
- ரெறாசோ

அனைத்திற்கும்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

# சஞ்சீவி

எஸ். தியாகராசா
ஒப்பந்தகாரர்
சேர் பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

☐ எமது இயற்கை வளங்களில் ஒன்று பனை.
☐ தமிழீழத்தின் குறியீட்டுச் சின்னம் பனை.
☐ சில ஆயிரம் பேர்களுக்கு தொழில் வழங்குவது பனை.
☐ பல ஆயிரம் மக்களுக்கு பயன் வழங்குவது பனை.
☐ மண்ணரிப்பைத் தடுப்பது பனை.
☐ மழை பெய்விப்பது பனை.
☐ நீண்டகாலம் பயனளிக்கும் சீனி மரம் பனை.
☐ அந்நியச் செலாவணி அளிக்கக் கூடியது பனை.
☐ பல வருடங்களாகப் பயன்தரக்கூடியது பனை.

எனவே

## பயன் தரும் பனையைத் தறியாதீர்

அனுமதியின்றிப் பனை தறித்தால்

தறிக்கப்பட்ட ஒவ்வொரு பனைக்கும்

**1000 ரூபா வீதம்**

அபராதம் விதிக்கப்படும்

**பனை தென்னைவள அபிவிருத்திப் பகுதி**
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

கலை, இலக்கியப் பணியில்
வெளிச்சம்
நிறையப் பங்காற்ற வேண்டுமென
வாழ்த்துகின்றோம்.

நித்தியா பாடசாலை சேவையும்
பிரபா பல்பொருள் வர்த்தக நிலையமும்

உங்கள் பிள்ளைகளை
உரிய நேரத்தில், கவனமாகப் பள்ளியில் சேர்க்கிறது
நித்தியா பாடசாலை சேவை
சிவன் வீதி, உரும்பிராய்.

எல்லாப் பொருட்களையும் ஒரே இடத்தில்
மலிவாகப் பெறுவது எவ்வளவு வசதியானது?
நிறைய இலாபமானதுமல்லவா!

- ☐ அழகுசாதனப் பொருட்கள்
- ☐ பலசரக்குச் சாமான்கள்
- ☐ சைக்கிள் உதிரிப்பாகங்கள்
- ☐ பிளாஸ்ரிக் பொருட்கள்
- ☐ பாதணி வகைகள்
- ☐ அன்பளிப்புப் பொருட்கள்

இன்னும் உங்களுக்குத் தேவையான அனைத்தையும் ஒரே மையத்திலேயே வழங்குகிறது.

பிரபா பல்பொருள் வர்த்தக நிலையம்
(சிறந்த விற்பனையாளர்கள்)
உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.

# மதுரம்

பாவனையாளர்களுக்கு ஓர் அறிமுகம்

குரக்கன்பிஸ்கட், வரகுப்பாண் தவிட்டுப்பாண்

உள்ளூர் உற்பத்தியில் இருந்து தயாரிக்கப்பட்ட......

- ☐ கொக்கோ இறீம் குரக்கன் பிஸ்கட்,
- ☐ கொக்கோ நைஸ் கம்பு பிஸ்கட்,
- ☐ பேபி றஸ்க், குரக்கன் பிஸ்கட்
- ☐ கம்பு பிஸ்கட், வரகு பிஸ்கட்
- ☐ தினை பிஸ்கட், நைஸ் பிஸ்கட்

இவை மட்டுமா......?

இன்னும்

- ☐ குரக்கன் பணிஸ்
- ☐ கறி பணிஸ்
- ☐ வரகுப்பாண்
- ☐ தவிட்டுப்பாண்
- ☐ அலம்பி றஸ்க்

உங்கள் திருமண, பிறந்ததின வைபவங்களுக்கு தேவையான கேக் வகைகள் ஓடர் கொடுத்துப் பெற்றுக்கொள்ள...

# மதுரம்

இன்றே நீங்கள் நாடிட எங்கள் முகவரி

**மதுரம் பலாலி வீதி, உரும்பிராய்**